ISSN 1391-9504

# விஜய்

Vijey விஜய்

23.11.2011 - மலர் 08, இதழ் 38




## உலக அதிசயம்: 'குகுல்கன் பிரமிட்'



## 'செவ்வாய்' செல்வதற்கான ஒத்திகை வெற்றி

## 2250 ஆண்டுகளுக்கு முன்னமே புற்றுநோய்





## விடுமுறையை பயனுடையதாக்குவோம்

விலை ரூபா 15/-

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆங்கிலேயர் பெற்ற லாபம்

**சேர்.** மியூரன் அவர்கள் வெனிஸ் நகரில் இருந்து அலெக்ஸாண்ட்ரியா மற்றும் கெய்ரோ நகரங்களுக்கு தரை மார்க்கமாகச் சென்றார். அங்கிருந்து சுயெஸ் பகுதிக்கும் சென்றார். சுயெஸில் இருந்து சென்னை வருவதற்காக கப்பல் ஏறினார். திருகோணமலை கோட்டையை அதற்கு சில தினங்களுக்குப் பின்புதான் ஆங்கிலேயர் கைப்பற்றினர்.


மியூரன் படையணி ஆங்கிலேயரிடம் கையளிக்கப்பட்ட செய்தி மியூரனின் சகோதரரான 'பியரே பெட்ரிக்' என்பவருக்கு மியூரனால் மிக மிக ரகசியமாக அறிவிக்கப்பட்டது. ஒல்லாந்த வெண்ணெய் கட்டி (Cheese) ஒன்றினுள் இடப்பட்ட கடிதம் மூலமே இச்செய்தி அறிவிக்கப்பட்டது. இச்செய்தியை 'வேன் ஏங்கல் பிக்' எனும் ஒல்லாந்த ஆள்பதிக்கு 'எக்னிவ்' எனும் சேனாதிபதி தெரிவித்தார். இதனால், அந்த ஒல்லாந்த ஆள்பதி மிகவும் சினமடைந்து அந்தப் படையணியைத் தாக்குவதற்கான நெருக்குதல்களைக் கொடுத்தார். அவ்வாறு தாக்குதலை நடத்தினால் அது பெரும் யுத்தத்தில் போய் முடியும் என சேனாதிபதி ஆள்பதிக்கு எடுத்துரைத்தார்.

இதனால், அச்சமடைந்த ஆள்பதி தனது எதிர்ப்பை வெளிக்காட்டவில்லை. இதன் காரணமாக, ஒல்லாந்தருடன் நெருங்கியவர்கள் 'மியூரன்' படையணியை கையளிக்க இணங்கினர். எனினும், அதற்கான நிபந்தனைகளையும் முன்வைத்தனர். அதாவது, கொழும்பைச் சுற்றி வளைப்பதற்கு அப்படையணிகளைப் பயன்படுத்துவதில்லை என்பதே அந்த நிபந்தனையாகும். அதற்கமைய, கொழும்பின் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்ட சுமார் 600 படைவீரர்கள் நீக்கப்பட்டனர். இந்தியாவிலுள்ள பிரித்தானிய படையணிக்கு எவ்வித அழுத்தங்களையும் ஏற்படுத்தாமல் சகலவற்றையும் செய்துமுடித்தனர். இதனால், மிக உயர்ந்த லாபத்தை பிரித்தானிய கிழக்கிந்திய வர்த்தக சங்கத்தினர் பெற்றனர். ஒவ்வொரு படை வீரருக்கும் சுமார் 100 தங்கப் பவுண்கள் லாபம் கிடைத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன், இந்தப் படையணியை விலக்கியதால் கொழும்புக் கோட்டையைப் பாதுகாப்பதற்காக இருந்த பேருதவி இல்லாமல் போனது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடைநிலைப் பாடசாலைகளில் 3,000 பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனங்கள்

இடைநிலைப் பாடசாலைகளில் கற்பிப்பதற்கென 3,000 பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாக அண்மையில் கொழும்பில் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கல்வித்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.



நாடு பூராகவும் 1,000 இடைநிலைப் பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின்கீழ், நாட்டின் பல பாகங்களில் இருந்து பாடசாலைகள் தெரிவு செய்யப்பட்டு அபிவிருத்தி செய்யப்பட்டு வருகின்றன. இந்தப் பாடசாலைகளில் கற்பிப்பதற்கென, பட்டதாரிகளை ஆசிரிய சேவையில் அமர்த்தும் பொருட்டு போட்டிப் பரீட்சைகள் நடாத்தப்பட்டன. அதன்படி, இந்தப் போட்டிப் பரீட்சைகளில் பட்டதாரிகள் பெறும் புள்ளிகளின் அடிப்படையில் அவர்களுக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாக கல்வித்துறை அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கணிதம், விஞ்ஞானம், தகவல் தொழில்நுட்பம், ஆங்கிலம் மற்றும் வெளிநாட்டு மொழிகள் போன்ற பாடங்களைக் கற்பிப்பதற்காகவே, மேற்படி ஆசிரிய நியமனங்கள் வழங்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# விரும்பினால் மழை வரும்!



லேசர் கதிர்களை தொடர்ச்சியாக வானில் செலுத்துவதனூடாக, நீர்த்திவலைகள் உருவாக்கப்பட்டு அதனூடாக மழையை பெய்விக்க முடியும் என சுவிற்சர்லாந்து நாட்டின் ஜெனிவா பல்கலைக்கழக விஞ்ஞானிகள் குழு கண்டறிந்துள்ளது.



இந்த அணுகுமுறையினூடாக, மழையை விரும்பும் நேரத்தில் வரவழைக்கலாம் என்ற நம்பிக்கை பிறந்துள்ளது. இதற்காக, மைனஸ் 24° செல்சியஸில் காணப்பட்ட குளிர்ந்த நீர் நிரம்பிய கொள்கலன் வழியாக அகச்சிவப்பு (இன்ஃப்ராரெட்) கதிர்களை வானில் செலுத்தினார்கள். அப்போது, நீர்த்திவலை ஆவியாகி மேகம் உருவானது. இதை சாதாரண கண்களாலும் பார்க்க முடிந்தது.



ஆய்வுக் குழுவைச் சேர்ந்த ஜெரோம் கெஸ்பெரியன் இது பற்றிக் கூறும் போது: "லேசர் கதிரானது, அணுக்களில் உள்ள எலக்ட்ரோனை ஒடுக்குவதன்மூலம் 'ஹைட்ரொக்சைல்' என்ற வேதிப்பொருள் அதிக அளவில் உருவாவதை ஊக்குவிக்கின்றது. இது தொடர்ந்து செயற்பட்டு சல்பர் மற்றும் நைட்ரஜன் டயொக்சைட் உருவாகிறது. இதுபோன்ற நிகழ்வுகளால் நீர் மூலக்கூறுகள் அடர்த்தி குறைந்து, நீராவி நிலைக்குச் சென்று மேகம் உருவாகின்றது. எங்கள் ஆய்வின்போது, வானத்தில் 60 மீற்றர் உயரத்தில் மேகம் உருவாக்கிக் காட்டப்பட்டது. எனவே, குறைந்த அளவு நீரைப் பயன்படுத்தி அதிகமான மேகத்திரள்களை உருவாக்க முடியும்" என்றார். என்றார்.

## பாடசாலைத் தேவைகளுக்காக லொத்தர் சீட்டுக்கள் விற்பனை செய்யத் தடை

பாடசாலைத் தேவைகளுக்கென்றோ அல்லது பாடசாலை அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கென்றோ இனிமேல் பாடசாலைகளில் எந்தவகையான லொத்தர் சீட்டுக்களையும் அச்சிட்டு விற்பனை செய்ய முடியாது




என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. இது தொடர்பான சுற்றுநிருபங்கள் சகல வலயக் கல்விப் பணிமனைகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அறியவருகின்றது.

எனினும், தவிர்க்க முடியாத நிலையில் நிதி வசூலிக்க வேண்டிய தேவை ஏற்படும் பட்சத்தில், லொத்தர் சீட்டுக்கள் வெளியிடப்படுவதாயின், அதற்காக வலயக் கல்விப் பணிப்பாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் அதனையிட்டு வலயக் கணக்காளரிடம் லொத்தர் சீட்டு விபரம் சமர்ப்பிக்கப்பட்டு வரவு-செலவு விபரம் காட்டப்பட்ட வேண்டும் என்றும் அச்சுற்றுநிருபத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விஜய்
Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk

# மாணவர்களுக்கு வெளிநாட்டு மொழிகளைக் கற்றுக்கொடுக்க நடவடிக்கை

## கல்வித்துறை அமைச்சர் தெரிவிப்பு




பாடசாலை மாணவர்களுக்கு வெளிநாட்டு மொழிகளைக் கற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கல்வித்துறை அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

மாணவர்களின் எதிர்கால விருத்திக்கு பன்மொழி அறிவானது அவசியமாகின்றது. அதற்கமைய; பிரெஞ்ச், ஜப்பனீஸ் மற்றும் ஹிந்தி போன்ற வெளிநாட்டு மொழிகளை மாணவர்கள் கற்றுக்கொள்வதற்கான வாய்ப்பு ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

வெளிநாட்டு மொழிகளை மாணவர்கள் கற்றுக்கொள்வதானது, எதிர்காலத்தில் அவர்கள் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக்கொள்ள வசதியாக இருக்கும். அதன்படி, நாட்டின் வடக்கு, கிழக்கு உட்பட, கண்டி, குருநாகல், மாத்தறை, காலி மற்றும் கம்பஹா ஆகிய நகரங்களில் வெளிநாட்டு மொழி விருத்திக்கான மத்தியநிலையங்கள் உருவாக்கப்பட்டு, அவற்றினூடாக, வெளிநாட்டு மொழிகள் கற்றுக்கொடுக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மாணவர்களின் இடைவிலகலைத் தடுப்பதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம்

## கல்வி அமைச்சு தெரிவிப்பு

பாடசாலை மாணவர்களின் இடைவிலகலைத் தடுப்பதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

அநேகமான மாணவர்கள் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு முன்னதாகவே தமது பாடசாலைக் கல்விக்கு முற்றுப்புள்ளி வைத்து விடுகின்றனர். அவ்வாறே, பெருந்தோட்டப் பிரதேசங்களில் வாழும் பெரும்பாலான மாணவர்கள் பாடசாலைகளிலிருந்து இடைவிலகுவதாகவும் அவர்களில் சில மாணவர்கள் தரம் ஒன்று வரை மட்டுமே கல்வி கற்று, பின்னர் பாடசாலையிலிருந்து இடையில் விலகி விடுவதாகவும் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.



வருமானம் குறைந்த குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள் மற்றும் தாய்-தந்தையை இழந்த பிள்ளைகளே, இவ்வாறு இடைவிலகும் நிலைக்குத் தள்ளப்படுவதாக ஆய்வுகளினூடாகத் தெரியவந்துள்ளது என கல்வி அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது.

எனவே, இத்தகைய மாணவர்கள் தமது கல்வியைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கும் அவர்களின் இடைவிலகலைத் தடுப்பதற்குமான நடவடிக்கைகளை எடுப்பதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம் தேவைப்படுவதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

30 நாட்கள் கொண்ட விசேட தபால் மூல ஆங்கிலப் பாடநெறி
ஆங்கிலம் பேசக் கற்போம் ! வெற்றி பெறுவோம்
நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே எம்முடன் இணைந்து எளிய நடையில் தமிழ் மூல விளக்கத்துடன் ஆங்கிலம் படிக்கலாம்.
பெயர் /முகவரி என்பவற்றை தெளிவாக குறிப்பிட்டு 0773 - 123 523 க்கு SMS செய்யுங்கள்.
பாடநெறியில் இணையும் அனைவருக்கும் இவைகள் வழங்கப்படும்
10 பாடத்தொகுதிகள் / Spoken English Video CD ஒன்று
Dialog Sim Card ஒன்று Video CD வழிகாட்டி புத்தகம் /
அடையாள அட்டை Diploma in English சான்றிதழ் ஒன்று
என்பன எலலா மாவண/மாணவிகளுக்கும். வழங்கப்படும்.




எமது DIPLOMA சான்றிதழ் உங்கள் திறமையை வெளிக்காட்டுவதுடன் எதிர்கால உள்நாட்டு வெளிநாட்டு வேலை வாய்ப்பபை பெற மற்றும் நேர்முகப்பரீட்சைகளுக்கும் இச்சான்றிதழ் தகுதி பெற்றது
UNION EDUCATIONAL INSTITUTE
P.O. BOX 143, KANDY, SRI LANKA. CALL: 0817 918 981 / 0773 123 523

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எல்-கெஸ்டில்லோ குகுல்கன் பிரமிட் (El-Castillo Kukulkan Pyramid)




அமெரிக்காவின் மெக்சிகோவிலுள்ள யுகடான் மாநிலத்தில் சீச்சென் இட்ஸா நகரில் அமைந்துள்ள படிக்கட்டுகளால் அமைக்கப்பட்ட எல்-கெஸ்டில்லோ குகுல்கன் பிரமிட் உலக அதிசயங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது.

24 மீற்றர் உயரமான இப்பிரமிட்டின் மேல் தளத்தில் 6 மீற்றர்கள் உயரம் கொண்ட இரண்டடுக்குக் கோயிலை மாயன் மக்கள் தமது வழிபாட்டுத் தலமாகப் பயன்படுத்தி வந்துள்ளனர். தவிர, இப்பிரமிட்டிற்குள் மன்னரின் அரண்மனை ஒன்றும் அமைக்கப்பட்டிருந்தது. ஆனால், அதன் சிதைவுகளின் எச்சங்களையே தற்போது காணக்கூடியதாக உள்ளது.

மெக்சிகோவிலுள்ள இப்பிரமிட் கோட்டையைக் கண்டுகழிப்பதற்காக, வருடத்திற்கு 40,000த்திற்கும் மேற்பட்ட உல்லாசப் பிரயாணிகள் இங்கு வருகை தருகின்றனர். மெரிடாவிலிருந்து 120 கிலோமீற்றர் தொலைவில் உள்ள கன்குனுக்கும் இடையில் சீச்சென் இட்ஸா நகர் அமைந்துள்ளது.

எல்-கெஸ்டில்லோ என்றால் ஸ்பானிய மொழியில் 'கோட்டை' என்று பொருள் படுகின்றது. அதனால், இதனை 'குகுல்கன் பிரமிட் கோட்டை' என அழைக்கின்றனர். இக்கோட்டை 6ஆம் நூற்றாண்டளவில் கட்டப்பட்டிருக்கக்கூடும் எனக் கருதப்படுகின்றது. இப்பிரமிட் கோட்டை மாயன் மக்களின் கலாசாரத்தைப் பிரதிபலிப்பதாகவும் அமைந்துள்ளது. மாயன் கெலண்டரின் பிரதிபலிப்பாக இப்பிரமிட்டின் படிக்கட்டுக்கள் காணப்படுவது அபூர்வமானதாகும்.

இப்பிரமிட் திசைக்கு 91 படிக்கட்டுக்களைக் கொண்டதாகவும் படிக்கட்டுக்கள் ஒன்று சேர்கின்ற இடத்தில் ஒரு படிக்கட்டுமாக மொத்தம் 365 படிக்கட்டுக்களைக் கொண்டுள்ளன. இது வருடத்தின் 365 நாட்களைக் குறிக்கின்றது. 3 மீற்றர் உயரமான இப்பிரமிட்டின் குறுக்களவு 55.3 மீற்றர்களாகும். பிரமிட்டின்மேல் தளப்பகுதிக்கு ஏறிச் சென்றால் சில்லென்ற காற்று வீசி உடலுக்கும் மனதுக்கும் இதத்தைத் தருவது மட்டுமல்லாமல்; நாலாபுறத்தின் இயற்கைக் காட்சிகளையும் கண்குளிரப் பார்வையிட முடிகின்றது.

குகுல்கன் பிரமிட் கோட்டையின் வடக்குப் படிக்கட்டு வித்தியாசமாக அமைந்துள்ளது. இரண்டு பாம்புகள் மேலிருந்து தரையை நோக்கி நகர்வது போன்ற அமைப்பில் இப்படிக்கட்டுக்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. சூரிய வெளிச்சம் இக்கோட்டையில் விழும்போது, பாம்புகளின் நிழல் படிக்கட்டுக்களில் விழுந்து பாம்புகள் உயிரோடு நகர்வது போன்ற பிரம்மையை ஏற்படுத்தும் வகையில் பாம்புகளின் உருவங்கள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இது மாயன் மக்களின் கட்டட நிர்மாண அறிவுக்கும், வானியல் அறிவுக்கும் தக்க சான்றாக அமைந்துள்ளது.

இப்பிரமிட்டின் மேல் தளத்தில் அமைந்துள்ள கோயிலின் சிதைவுகளையே தற்போது காணமுடிகின்றது. இது கடந்தகால மாயன் கலாசாரத்தின் மௌனசாட்சியாகும். மாயன் மக்களின் குகுல்கன் எனும் பாம்புக் கடவுளுக்காகக் கட்டப்பட்டதே இப்பிரமிட் கோயிலாகும். இதனை அவர்கள் 'குவெல்டால் கோட்டில்' என அழைத்தனர். குவெல்டால் கோட்டில் என்றால் 'கடவுள் அருள்பெற்ற ஞானமுடையவன்' என்பது பொருளாகும்.

கி.பி.1920-40 அளவில் மெக்சிகன் அரசு, வொஷிங்டனில் அமைந்துள்ள 'கென்டக்கி' நிறுவனத்தின்மூலம் இப்பிரமிட் கோட்டையைப் பாரிய மாற்றங்களுடன் புனர்நிர்மாணம் செய்தது. இதன்போது, இதன் நான்கு புறங்களிம் உள்ள படிக்கட்டுக்கள் விரிவாக்கம் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





சீச்சென் இட்ஸா என்றழைக்கப்படும் நகரிலேயே இப்பிரமிட் கோபுரம் அமைந்துள்ளது. இந்நகர் 'இட்ஸா' எனப்படும் படை வீரர்களால் நிர்மாணிக்கப்பட்டதாகும். இட்ஸா படைவீரர்கள் கட்டடக் கலைஞர்களாகவும், வானியல் நிபுணர்களாகவும் இருந்தமைக்கு இக்கோட்டைப் பிரமிட்டுக்கள் சாட்சியாக உள்ளன.

சீச்சென் என்றால் 'கிணற்றின் வாய்' என்பது பொருள். அதனாலேயே, இந்நகர் சீச்சென் இட்ஸா என்றழைக்கப்படுகின்றது. மாயன் நாகரிகம் கிணற்றைப் புனித இடமாகக் கருதியமைக்கு இச்சொல் ஆதாரமாக இருக்கின்றது. பிரமிட்டுக்கு வடக்கே அமைந்துள்ள கிணறு 285 அடி அகலத்தைக் கொண்டுள்ளது.

மாயன் மக்களின் அறிவுக்கும், திறமைக்கும் சான்றாக அமைந்துள்ள இப்பிரமிட் உலக அதிசயங்களில் ஒன்றாகக் கருதப்படுகின்றது.

ஐ.ஏ.ஸத்தார்



# விசித்திர மீன்கள்


## மீன்களை உண்ணும் மீன்கள்



மீன்கள் ஒன்றை ஒன்று பிடித்து தங்களுக்கு இரையாக்கிக் கொள்கின்றன. இவ்வாறே, ஏறத்தாழ 53 சதவீத மீன்கள் ஏனைய மீன்களைப் பிடித்து உண்கின்றன. 'ஜேக்' போன்ற பெரிய இன மீன்கள், தமது இரையை விரட்டிப் பிடிக்கின்றன. 'லிசார்ட்' எனும் ஒருவகை மீன்கள், தமது இரையான மீன்களைப் பதுங்கி இருந்தே பிடிக்கின்றன. 'விலாங்கு' மீன்கள் பாறைகளின் இடுக்குகள் வழியாகச் சென்று, தமக்கு வேண்டிய மீன்களைப் பிடித்து உண்கின்றன. சில மீன்கள் அமைதியாக இருப்பது போன்று பாசாங்கு செய்து உரிய நேரத்தில், தமது இரையை மிக லாவகமாகப் பிடித்து, உண்கின்றன.

## வேதாள மீன்

கடற்குதிரை இன மீன்களில் இதுவும் ஒன்று. இந்த மீன், அவுஸ்திரேலியாவின் தென்பகுதிகளிலேயே காணப்படுகின்றது. 46 சென்றி மீற்றர் நீளம் வரை வளரும் இவை, கடற்பாசிகளுக்குள் மறைந்து வாழ்வதற்கு ஏற்ப, தமது உடலில் பல மாற்றங்களைக் கொண்டுள்ளன. இதன் தலை,



கழுத்து, அடி வயிற்றின் முன்பாகம், முதுகு, உடலின் பின்புற மேற்பகுதி மற்றும் வால்பகுதியின் மேற்பகுதி போன்ற இடங்களில் இலைகள் போன்று தோற்றம் அளிக்கும் துடுப்புகள் உள்ளன. இதன் உடல் பாகம், இலை மடிப்புகள் போன்று காணப்படும். இந்த மீன்களால் வேகமாக நீந்த முடிவதில்லை. அத்துடன், இவை எந்த மீன் இனத்தையும் எதிர்த்து நிற்பதில்லை. இதனால், தன்னைத்தானே காப்பாற்றிக்கொள்வது இதற்கு இயலாத விடயமாகவே உள்ளது. இதன் பாதுகாப்பு அம்சமாக, கடற்பாசிகளுக்கு இடையே மறைந்து வாழ்வதற்கேற்ப, இதன் உடல் அமைப்பு காணப்படுகின்றது.

## முள்ளம்பன்றி மீன்



இதன் அறிவியல் பெயர் டையோடொன் ஹிஸ்ட்ரிக்ஸ். இது பசுபிக், இந்தியன் மற்றும் அத்திலாந்திக் போன்ற பெருங்கடல்களின் வெப்ப மண்டலப் பகுதிகளில் காணப்படுகின்றது. இந்த மீனின் உடல் பாகம் முழுவதும் முள்ளம்பன்றியைப் போன்று கூர்மையான முட்களுடன் காணப்படும். சாதாரண நிலையில், இதனுடைய முட்கள் வெளியே தெரியாதவாறு படுத்திருக்கும். ஆபத்தான வேளைகளில், இவை குத்திட்டு நிற்கும். அதனால், எதிரிகள் இவற்றை நெருங்குவது மிகவும் சிரமமான விடயமே. இதன் இரு தாடைகளிலும் உறுதியான பற்கள் உள்ளன. இவை ஒன்றோடொன்று இணைந்துள்ளன.

## தூண்டில் போடும் மீன்கள்

தூண்டில் மீனின் தோற்றம் மிக வினோதமானது. இதன் உடலும், நிறமும் இரைபிடிப்பதற்கேற்ற வசதியுடன் அமைந்துள்ளது. முதுகுத் துடுப்பின்



முதல் முள், தூண்டில் கம்பு போல, நீளமாக இருக்கும். அதன் முனையில் 'லூர்' என்ற இரையைக் கவர்ந்திழுக்கும் பாகம் காணப்படும். இதனை தன் வாயின் முன்புறம் உள்ளவாறு வைத்து, இரையைக் கவர்கிறது. தமக்கு இரையாகும் மீன்கள் அருகில் வந்ததும், தூண்டிலை உயர்த்திவிட்டு, வாயை அகலமாகத் திறந்து, மீனை இரையாக்குகின்றன.

## கடல் நட்சத்திரங்கள்

நட்சத்திர மீன்களைத் தான் 'கடல் நட்சத்திரங்கள்' என்கிறார்கள். உண்மையில், நட்சத்திர மீன்கள் மீன்களின் வகையைச் சாராதவையாகும். இவற்றிற்கு முதுகெலும்பு கிடையாது. ஆனால், மீன்களுக்கு முதுகெலும்பு காணப்படுகின்றது. நட்சத்திர மீன்கள் 'எக்கைனோ டேர்மஸ்' என்ற கூட்டத்தைச் சார்ந்தவை. மீன்கள் 'பிஸ்கெஸ்' கூட்டத்தைச் சார்ந்தவை. இந்த கடல் நட்சத்திரங்களின் கண்கள் போதிய வளர்ச்சியுடன் காணப்படுவதில்லை.



இவற்றின் ஒவ்வொரு புயங்களிலும் முனைப்பகுதியில் ஒருவகைச் சிவப்பு நிறப்பொருள் காணப்படும். இந்தப் பகுதிகளைக் 'கட்புள்ளிகள்' என்கின்றனர். ஒளி பட்டதும், இந்நிறப் பொருள்களில் வேதிவினை மாற்றங்கள் உண்டாகிறது. அதை உணர்ந்துகொண்டு இவை அதற்கேற்ப நகர்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாழ்வு மனப்பான்மையை அகற்றிடுவோம்!



*எமது எதிர்காலத்தை தீர்மானிப்பது நாம் வளர்த்துக்கொள்ளும் எமது மனப்பான்மைதான். எமது செயல்களை செவ்வனே அமைத்துக்கொள்ளவும் அதனூடாக, உரிய பயனைப் பெறவும் எமது மனப்பான்மையை சிறப்பாக பழக்கப்படுத்திக்கொள்ள வேண்டும். தவிர, பிறரோடு தம்மை ஒப்பிட்டு- பலவீனமடைந்து தம்முள் தாழ்வு மனப்பான்மையை ஏற்படுத்திக் கொள்வதானது, எம்மை நாமே பின்தள்ளி விடுவதாக அமைந்துவிடும்*

## கல்வி முகாமைத்துவம் - 82

### கற்றலுக்கான ஆலோசனைகள்

தாழ்வு மனப்பான்மை கொள்வதால், எம் உள்ளத்தில் ஒரு பலவீனமான எண்ணம் குடிகொண்டுவிடும். இந்தப் பலவீனமான எண்ணமானது, எமது செயற்பாட்டு வேகத்தை தளர்த்துவதோடு, எம்மை உறுதியாகச் செயற்படவும் விடாது.





இறைவன் மனிதனுக்கு மனிதன் திறமைகளையும் திறன்களையும் வித்தியாசமாக மாற்றி மாற்றிப் படைத்துள்ளான். ஒருவர் கொண்டுள்ள அறிவுக்கும் இன்னொருவர் கொண்டுள்ள அறிவுக்கும் வேறுபாடுகள் நிறைந்து காணப்படும். இதனை அறியாமல் சிலர் பிறரை உயர்வாகவும் தம்மை இழிவாகவும் கருதுவதால், தாழ்வு மனப்பான்மை தோன்றுகின்றது.

### தாழ்வு மனப்பான்மை ஏற்பட்டால்....

தாழ்வு மனப்பான்மை ஏற்பட்டால், எவருடனும் உறுதியாகப் பேச முடியாது; புதிதாக எதையும் சிந்திக்க முடியாது; கவலை ஏற்படும். இத்தகைய மனப்பான்மை ஏற்பட்ட ஒருவர் தனது மனதுடனும் தன்னுடனும் ஒரு போராட்டத்தை ஏற்படுத்திக்கொண்டே இருப்பார். அத்துடன், இந்த தாழ்வு மனப்பான்மையானது கல்வியில் சீர்கேட்டையே ஏற்படுத்தும். எனவே, எப்போதும் எமது பகுத்தறிவைப் பயன்படுத்தி செயற்பட வேண்டும்.

### தாழ்வு மனப்பான்மையை அகற்றிட செய்ய வேண்டியவை

ஒவ்வொருவரும் தாழ்வு மனப்பான்மையை அகற்றி வாழ்வில் வெற்றி பெற, முயற்சி செய்ய வேண்டும். எப்போதும் நம்மை நாமே சிறப்பாக மதிப்பிட்டுக்கொள்ள



வேண்டும். அதுவே எம்மை உயர்த்திவிடும்.

அத்துடன், உண்மையைப் புரிந்துகொண்டு, பகுத்தறிவுடன் உணர்ந்து தன்னை உயர்வாகக் கருதி செயற்பட வேண்டும். மாறாக, ஏனைய மாணவர்களோடு, தம்மை மதிப்பிட்டு செயற்படுவதால், எமது நேரமும் கல்வியுமே பாதிப்படையும்.

நாம் கல்வி கற்கும்போது, எமது சிந்தனைகள் யாவும் உறுதியானதாகவும் நல்லனவாகவும் அமைய வேண்டும். அவ்வாறு அமைந்தால்தான் எம்மால் சிறப்பாக இயங்கவும் நினைத்ததைச் சாதிக்கவும் முடியும். ஏனைய மாணவர்கள் வசதியானவர்கள்- அழகானவர்கள்- கெட்டிக்காரர்கள்; அவர்களைப்போல் என்னால் ஒன்றும் செய்ய முடியாது என்று உறுதியற்ற எண்ணங்களை மனதில்கொண்டு வாழ்வதால் எந்தவித பயனும் இல்லை. எனவே, உறுதியான- நல்ல எண்ணங்களுக்கு வலிமை சேர்க்க வேண்டும்.



மேலும், தாழ்வு மனப்பான்மையானது, எமது செயற்பாடுகளை சீரழிக்க வல்லது. அது உடல், உள ஆரோக்கியத்தைக் கெடுத்துவிடும். எனவே, அதற்கு அடிமையாகாது முயற்சி செய்து, உறுதி பூண்டு எமது கல்வியை ஆரம்பிக்க வேண்டும். எம்மை நாம் உயர்வாகக் கருதி சமூகத்துக்கு முன்மாதிரியாக வாழ்ந்துகாட்ட வேண்டும். அதுவே, எமது வாழ்க்கையை ஒளிமயமாக்கிவிடும்.

(தொடரும்)

**எம்.ஏ.எஃப்.சப்ரானா**

# 2011, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



நாம்புழுவை பாபுஸ்ஸலாம் ம.வித்தியாலய மாணவி எஃப்.அஸ்மிலா, 182 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



க.யுதர்ஷன், 179 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மாணவராவார்.



யா/குப்பிளான் விக்கினேஸ்வரா மகா வித்தியாலய மாணவன் ந.டனுஷன், 166 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



சாதாப் ஜஹான், 164 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், அக்கரைப்பற்று ஆயிஷா பாலிகா மகா வித்தியாலய மாணவியாவார்.



இரத்தினபுரி பர்குசன் உயர்தரப் பாடசாலை மாணவன் ராஜித டிலான் நாயர், 183 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், ரவிந்திரநாயர்- சுபதேவி தம்பதியரின் புதல்வராவார்.



இரத்தினபுரி பர்குசன் உயர்தரப் பாடசாலை மாணவன் இஜாஸ் அஹமட், 166 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், வசீம் அஹமட்-இஸ்ரத் பாத்திமா தம்பதியரின் புதல்வராவார்.



இரத்தினபுரி பர்குசன் உயர்தரப் பாடசாலை மாணவன் எரிக் றொனால்ட், 166 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், என்டனி பெர்னான்டோ-ரெஜினா தம்பதியரின் புதல்வராவார்.



எஃப்.ஸஸ்ரா, 155 புள்ளிகளைப் பெற்றுள்ளார். தெஹிதெனிய முஸ்லிம் மகா வித்தியாலய மாணவியான இவர், சபீல்ட்- சவுருவான் தம்பதியரின் புதல்வியாவார்.



ஆ.ஆதித்யா, 158 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், மன்/தாராபுரம் அல்-மினா மகா.வித்தியாலய மாணவியாவார்.



பங்கரகம்மன முஸ்லிம் வித்தியாலய மாணவன் எம்.ஜமீல், 163 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், மாலிக்- றிஸ்மியா தம்பதியரின் புதல்வராவார்.



இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய மாணவன் நி.தரஞ்ஜன், 156 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



நுவரெலியா பரிசுத்த திரித்துவ மத்.கல்லூரி மாணவி பெ.சுபதர்ஷினி, 186 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், பெரியசாமி- மீனாம்பாள் தம்பதியரின் புதல்வியாவார்.



கி.லிங்கேஸ்வரன், 174 புள்ளிகளைப் பெற்றுள்ளார். நுவரெலியா பரிசுத்த திரித்துவ மத்.கல்லூரி மாணவனான இவர், கிருஷ்ணமூர்த்தி-சசிகலா தம்பதியரின் புதல்வராவார்.



ப.நிருபன், 170 புள்ளிகளைப் பெற்றுள்ளார். நுவரெலியா பரிசுத்த திரித்துவ மத்.கல்லூரி மாணவனான இவர், பத்மநாதன்-கிருஷ்ணவேணி தம்பதியரின் புதல்வராவார்.



நுவரெலியா பரிசுத்த திரித்துவ மத்.கல்லூரி மாணவனான ச.விதுக்ஷன், 165 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், சந்திரசேகரன்- புவனேஸ்வரி தம்பதியரின் புதல்வராவார்.



சி.றஜீவ், 157 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், யா/குப்பிளான் விக்கினேஸ்வரா மகா வித்தியாலய மாணவராவார்.



நாங்கல்ல மு.ம.வித்தியாலய மாணவன் எம்.பரஹி, 173 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், அமீர் ரிழ்வான்-மஹ்ஜபீன் தம்பதியரின் புதல்வராவார்.



நாங்கல்ல மு.ம.வித்தியாலய மாணவன் எம்.டில்ஷான், 163 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், நிஸார்-நிஸா தம்பதியரின் புதல்வராவார்.



*பு/மணல்குன்று முஸ்லிம் மகா வித்தியாலய மாணவர்களான (இ.வ) ஏ.அன்பாஸா (153 புள்ளிகள்), எஃப்.றுஸ்தா (172 புள்ளிகள்), எஃப்.நுஸ்ஹறா (177 புள்ளிகள்), எம்.பஹ்ஹாம் (161 புள்ளிகள்) ஆகியோர் தமது ஆசிரியைகளான எம்.ஒ.சபீனா, எஸ்.சுஹைனா, பிரதி அதிபர் இப்ரா லெப்பை, அதிபர் அப்துல் ஜப்பார், பகுதித் தலைவர் எம்.அஸ்ஹர், ஆசிரியர் ஏ.ஜுவாஹிர் ஆகியோருடன் காணப்படுகின்றனர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# முத்திரைகள்




முத்திரை ஒன்றின் அளவு மிகச் சிறியதாக இருப்பினும், அது மிகவும் பெறுமதி வாய்ந்தது. இதன்மூலம் கிடைக்கும் பலன்களோ எண்ணிலடங்காதவை. அந்தவகையில், முத்திரை ஒன்றின் பழமை, அதில் அடங்கியுள்ள விடயங்கள் என்பன அதன் பெறுமதியை மேலும், அதிகரிக்கச் செய்கின்றது. இவ்வாறான பெறுமதிகளுக்காக முத்திரைகள் முக்கியத்துவம் பெறுவதனால் பெரியோர் முதல் சிறியோர் வரை முத்திரை சேகரிப்பினை தமது தலையாய பொழுதுபோக்காகக் கொண்டிருக்கின்றனர். அத்துடன், கடிதங்கள் மற்றும் பொருட்களின் பெறுமதியானது, அதற்கு இடப்படும் முத்திரையின் அடிப்படையிலேயே தீர்மானிக்கப்படுகின்றது. இதனாலேயே முத்திரைகள் பற்றி நாம் அறிந்திருக்க வேண்டியது அவசியமாகின்றது. கி.பி.1640 இல் இங்கிலாந்தின் எட்வர்ட் மன்னரின் காலப் பகுதியில் அரசனுக்கு ஒரு கட்டணத்தினை செலுத்தி தகவல்களை அனுப்பக்கூடிய தபால் சேவை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது. முன்னைய காலங்களில் பொதிகளை தபால் செய்யும் போது, முத்திரைகள் ஒட்டப்படவில்லை. மாறாக, கடிதத்தினை அல்லது பொதியினைப் பெறுபவர்கள் அதற்கான முத்திரைப் பெறுமதியினை செலுத்த வேண்டியிருந்தது. அநேகமாக, அந்த பெறுமதி தூரத்தின் அடிப்படையில் மாறுபட்டிருந்தது.

இதனால், அக்காலத்தில் தபாற்காரர்கள் வரும்வேளையில் தபாலினைப் பெறுவோர் வீடுகளுக்குள் முடங்கி விடும் நிலை காணப்பட்டது. இதனால், மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கினர். இந்த சிக்கல்களுக்கு தீர்வு கண்டு மறுசீரமைப்பு பணிகளை மேற்கொள்ளும் நடவடிக்கைகளில் இங்கிலாந்தைச் சேர்ந்த ஸ்ரீமத் ரோலன்ட் ஹில் என்பவர் ஈடுபட்டார். இதன்பின்னர், முத்திரைப் பாவனை ஆரம்பமாகி பரவலடைய ஆரம்பித்தது. தூரத்தினைக் கருத்திற் கொள்ளாது, பொதிகளின் நிறையினைக் கவனத்தில் கொண்டு அதற்கான முத்திரைப் பெறுமதியினை அனுப்புபவர் செலுத்த வேண்டும் என்று அவர் யோசனை தெரிவித்தார். இந்த யோசனையைக் கடைப்பிடித்தால் கடிதங்களின்மூலம் தபாலகங்கள் நிரம்பி வழியும் என்றும் அவற்றை அப்புறப்படுத்த பஸ் வண்டிகளையும், ரயில் வண்டிகளையும் பயன்படுத்த வேண்டும் என்று பலரும் கருத்துத் தெரிவித்தனர். எனினும், சேர். ரொலன்ட் ஹில்லின் யோசனையின் அடிப்படையில் 1840 மே மாதம் 7 ஆம் திகதி உலகின் முதலாவது முத்திரை இங்கிலாந்தில் வெளியிடப்பட்டது. இந்த சம்பவம் தபால் சேவைகள் வரலாற்றில் பெரும் புரட்சியினை ஏற்படுத்தியது. இதனால், ரோலன்ட் ஹில் 'நைட்' பதவி வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.





## உலகின் முதலாவது தபால் முத்திரை

சேர். ரோலன்ட் ஹில்லினால் உருவாக்கப்பட்ட உலகின் முதலாவது தபால் முத்திரை விக்டோரியா ராணியின் உருவம் பொறிக்கப்பட்டதாக அமைந்திருந்தது. கறுப்பு நிறத்தில் ஒரு பென்ச (இங்கிலாந்தின் ஒரு சதத்தினைக் குறிப்பிடுவது) பெறுமதி கொண்ட முத்திரையாக அது காணப்பட்டதால் அந்த முத்திரையினை 'பெனீப்ளெக்' என்று அழைத்தனர். இந்த முத்திரை தற்போது இருக்கும் முத்திரைகள் போலன்றி வெட்டி எடுக்கப்பட வேண்டியதாக இருந்தது.

## முத்திரை சேகரிப்பு

முத்திரை சேகரிப்பு, உலகில் மிகவும் பிரபல்யமான ஒரு பொழுது போக்காகும். 'பொழுதுபோக்குகளின் அரசன்' என்றும் இதனைக் குறிப்பிடுவர். முத்திரை சேகரித்தல் மற்றும் அது தொடர்பான பொழுதுபோக்கினை 'Philately' என்று ஆங்கிலத்தில் அழைப்பர். கிரேக்க மொழியில் 'Philos' (அன்பு) மற்றும் ateleia (கட்டணம் செலுத்தப்படாத) ஆகிய சொற்களை இணைத்தே இந்த Philately என்ற சொல் உருவாக்கம் பெற்றது. இந்த யோசனையை பிரான்ஸ் நாட்டவரான ஜோர்ஜ் ஹார்பின் என்பவரே உலகுக்கு அறிமுகப்படுத்தினார். 'கட்டணம் செலுத்தப்படாத அன்பு' என்பதே இந்த சொல்லின் பொருளாகும்.




## முத்திரை சேகரிப்பின் நன்மைகள்

- முறையான, சுத்தமான முத்திரை சேகரிப்பானது, செயற்பாட்டுத் திறனையும் பொறுமையையும் கலை ஆர்வத்தினையும் மனதில் ஏற்படுத்தும்.
- பூகோளவியல் பாடத்தினைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு முத்திரைகளின் பயன்பாடு மிகவும் பிரயோசனமானதாக அமையும்.
- ஒரு நாட்டின் அரசியல், கலாசாரம், அழகியல் சார்ந்த விடயங்களை வெளிப்படுத்தும் கண்ணாடியைப் போன்று முத்திரைகள் காணப்படுகின்றன.
- தகவல்களை ஆராய்ந்து அறிந்துகொள்ளவும் வெளியுலக விடயங்களை தெரிந்துகொள்ளவும் முத்திரைகள் உதவுகின்றன.
- உள நலனுக்கும் முத்திரைகள் உதவுகின்றன. ''நான் சுகவீனமுற்றிருக்கும்போது மருந்துகள் மூலம் கிடைக்காத உடல் நலம் முத்திரைப் புத்தகத்தினை திறந்து பார்த்தபோது கிடைத்தது'' என்று அமெரிக்காவின் ஜனாதிபதியாக இருந்த பிராங்க்ளின் ரூஸ்வெல்ட் தெரிவித்துள்ளார்.

## இலங்கையின் முதலாவது தபால் முத்திரை

1857 ஆம் ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதி இலங்கையில் முதலாவது தபால் முத்திரை வெளியிடப்பட்டது. விக்டோரியா அரசியின் உருவத்தினை வெளிப்படுத்தும் இந்த முத்திரை 6 (பென்ச)பெறுமதியைக் கொண்டிருந்தது. இதில் துளைகள் எதுவும் இருக்கவில்லை.

- துளைகள் கொண்ட முத்திரை இலங்கையில் 1861 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டது.



- சிங்கள எழுத்துக்கள் கொண்ட முத்திரை 1958 மே 14 ஆம் திகதி வெளியிடப்பட்டது.
- இலங்கையில் அச்சடிக்கப்பட்ட முதலாவது முத்திரை 2002 மார்ச் 15 ஆம் திகதி வெளியிடப்பட்டது.

## தபால் முத்திரையின் இரு பகுதிகள்

- நிலையான தொகுதி முத்திரைகள்
- நினைவுகூரும் முத்திரைகள்

அன்றாட பாவனைக்கு அதிகம் பயன்படுத்தப்படும் பெறுமதி கொண்ட முத்திரைகளே நிலையான முத்திரை என்ற குழுமத்திற்குள் வரும். இவை தொகுதியாகவும் தொடர்ச்சியாகவும் வெளியிடப்படும். ஒரு நபர், சம்பவம், விழா, நினைவு தினம் என்பனவற்றை நினைவுகூரவும் அது தொடர்பான பிரசாரத்தினை மேற்கொள்ளவும் நினைவுகூரும் முத்திரைகள் வெளியிடப்படுவதுடன், இவை ஒரு தடவை மாத்திரமே பிரசுரிக்கப்படும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பற்றிய தகவல்கள்

## முத்திரை சேகரிப்புக்கு எம்மை ஊக்குவிக்கும் காரணிகள்

- அதிக பணச் செலவு இல்லாமை.
- சேகரிப்பதற்கான இட வசதிகள் அதிகம் தேவைப்படாமை.
- அவற்றைப் பாதுகாப்பது இலகுவாக இருக்கின்றமை.
- முத்திரை சேகரிப்பினால் ஏற்படும் திருப்தி மற்றும் மன மகிழ்ச்சி.
- அறிவுத்திறனை வளர்த்துக்கொள்ளல்.
- பொருளாதார நலன்கள்

## இலங்கையில் முத்திரை சேகரிப்புக் கலை




இலங்கையில் முத்திரை மன்னன் என்ற பெயர் பெற்றவராக அர்னஸ்ட் சில்வா விளங்குகிறார். தனது 'போஸ்ட் ஒ.ஃபீஸ்' முத்திரையை லண்டன் முத்திரை ஏலத்தில் அறுபது ஆயிரம் ரூபாவுக்கு விற்றார். கொழும்பு கோட்டை இளைஞர் பௌத்த சங்கக் கட்டிடத்தினை அவர் தனது முத்திரை சேகரிப்பு மூலம் பெறப்பட்ட நிதியினை கொண்டே கட்டினார். 1925 ஆம் ஆண்டு இலங்கையில் வெளியிடப்பட்ட ஜோர்ஜ் மன்னரின் உருவப் படம் கொண்ட ரூ 1000.00 பெறுமதியான முத்திரை, 1981 இல் நடைபெற்ற ஏலத்தில் 5 லட்சத்து ஐம்பதாயிரம் ரூபாவுக்கு விற்கப்பட்டது. 1859 இல் வெளியிடப்பட்ட விக்டோரியா அரசியின் உருவப்படம் கொண்ட முத்திரை இன்று 50,000 பிரித்தானிய பவுன்ஸ் பெறுமதி கொண்டது எனக் கணிக்கப்பட்டுள்ளது.

## மேலதிகமாக அச்சடிக்கப்பட்ட முத்திரைகள்

முத்திரைகள் பற்றாக்குறை நிலவும் காலங்களில் மற்றும் கட்டண மாற்றங்கள் செய்யப்பட்ட வேளைகளில் மேலதிகமாக அச்சடிக்கப்பட்ட முத்திரைகள் வெளியிடப்படும். முன்னர் வெளியிடப்பட்டிருக்கும் முத்திரை ஒன்றின் விலையை மாற்றி வேறு ஒரு விலை குறிப்பிட்டிருக்குமாயின், அதனை மேலதிகமாக அச்சடிக்கப்பட்ட முத்திரை என்று கூறுவர்.

## முதல் நாள் கடித உறை




முத்திரை ஒன்றினை வெளியிடும்போது, அந்த முத்திரை தொடர்பான திட்டமிடல்கள் மற்றும் விசேட நாள் முத்திரையுடன் முத்திரைப் பணியகம் வெளியிடும் கடித உறையை இவ்வாறு அழைப்பார்கள். அத்துடன், விநியோகிக்கப்படும் அறிவித்தல் பிரசுரத்தின் ஊடாக, முத்திரைகள் தொடர்பான முழுமையான தகவல்களையும் பெற முடியும்.

## நினைவுச்சின்ன துண்டுப்பிரசுரம்

முத்திரைகள் வெளியிடப்படும் சில சந்தர்ப்பங்களின்போது, வெளியிடப்படும் முத்திரைகள் அனைத்தும் உள்ளடக்கப்பட்டு, அந்த முத்திரைகளுக்குரிய அழகிய பின்னணியையும் இணைத்து நினைவுச்சின்னமான துண்டுப்பிரசுரம் ஒன்று வெளியிடப்படும். இதில் முத்திரைப் பாவனைச் சட்ட ரீதியானது என்பதுடன், துளைகள் தொகுதியும் உள்ளன. இவ்வாறு இல்லாத நினைவுச் சின்ன துண்டுப் பிரசுரங்களும் வெளியாகியுள்ளன.

## நாள் முத்திரை

முதல்நாள், விசேட, சாதாரண, விமானத் தபால், பதிவு தபால், நடமாடும் தபால் காரியாலயங்கள் மற்றும் முகாம் தபாலங்கள் ஆகிய பலதரப்பட்ட இடங்களில் முத்திரைகள் பல்வேறு சந்தர்ப்பங்களில் பயன்படுத்தப்படுகின்றன. முத்திரையை ரத்து செய்வது இதில் முதன்மையானது. முத்திரை விரும்பிகள் இந்த நாள் முத்திரைக் குறிப்பினைப் பயன்படுத்துவதற்கும் அதிக விருப்பமுடையவர்களாக இருக்கின்றனர்.

## விசேட கடித உறை

முத்திரை வெளியிடாத சந்தர்ப்பங்களில் விசேட கடித உறைகள் வெளியிடப்படுகின்றன. அதில் குறிப்பிட்ட ஒரு விசேட விடயத்தினை அச்சுப்பிரதிசெய்து, உறையின்மீது முன் வெளியிடப்பட்ட முத்திரையை இட்டு ரத்துச் செய்வர்.

## முத்திரைகளை எவ்வாறு சேகரிக்கலாம்?

- பலவிதமான தொனிப்பொருளின் அடிப்படையில். (உதாரணம்: பறவைகள், பூக்கள், வனவிலங்குகள், தேசிய வீரர்கள், வாகனங்கள்)
- பலதரப்பட்ட நாடுகளின் அடிப்படையில். (உதாரணம்: இலங்கை, பிரித்தானியா, பொதுநலவாய நாடுகள்)

## முத்திரைகளைப் பெற்றுக்கொள்ளுதல்

- அனைத்து தபாலகங்கள்.
- முத்திரைப் பணியகம் மற்றும் பிற கிளை அலுவலகங்கள்.
- நண்பர்களுடன் பரிமாற்றம்.
- கொள்வனவு செய்தல். ◆ முத்திரைக் கண்காட்சிகள்.

## பயன்படுத்தப்பட்ட முத்திரைகளை சேகரித்தல்

- கடித உறைகளில் முத்திரை கொண்ட பகுதியினை வெட்டி நீரில் அமிழ்த்தி எடுத்து மெதுவாகப் பிரித்தெடுக்கும்போது, முத்திரைக்கு எந்தவிதமான பாதிப்பும் ஏற்படாது.
- முத்திரையின் பின்புறம் பழுதுபட ஆரம்பித்தால் அதனை மெதுவாக நீரினால் துடைத்து விடவேண்டும்.

## அச்சடிக்கப்பட்ட தரத்தில் முத்திரைகளை சேகரித்தல்

- கொள்வனவு செய்யப்பட்ட விதத்தில் பின்புறத்தில் பாதுகாப்பு பூச்சு ஒன்றினை பூசி வையுங்கள்.
- முகப் பௌடர் சிறிதளவினை முத்திரையின் பின்புறம் தூவி விடுங்கள். இது முத்திரையின் பாதுகாப்பிற்கு உகந்த முறையாகும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலி



**அரசு:** இரு சபைகளைக்கொண்ட பல கட்சிக் குடியரசு.
**சுதந்திரம்:** ஸ்பெய்னிடமிருந்து பிரகடனப்படுத்தப்பட்டது- 1818 பெப்ரவரி 12; அங்கீகரிக்கப்பட்டது- 1844 ஏப்ரல் 25; தற்போதைய அரசியலமைப்பு- 1980 செப்டெம்பர் 11.
**தேசிய பெயர்:** ரிபப்ளிக்கா டி சிலி.
**தேசிய விடுமுறை தினம்:** சுதந்திர தினமாகிய பெப்ரவரி 12.
**ஜனாதிபதி** (2010): செபஸ்டியன் பினேரா.



தேசிய இலச்சினை

## புவியியல்

சிலி நாடானது, பேரு நாட்டிற்கு தெற்கேயும் பொலிவியா மற்றும் ஆர்ஜன்டினா ஆகிய நாடுகளுக்கு மேற்கேயும் அமைந்துள்ளது. பென்சில் வடிவத்தை ஒத்த ஒடுங்கிய நீண்ட நிலத்தோற்றத்தை இது கொண்டுள்ளது. இந்நாட்டின் மேற்குப் பகுதியில் பசுபிக் சமுத்திரத்துடன் நீண்ட கரையோரமும் அமையப்பெற்றுள்ளது. சிலியின் கிழக்கே உலகின் மிக நீளமான


லா போர்ட்டா இயற்கைச் சின்னம்

மலைத்தொடராகிய 'அந்தீஸ்' மலைத்தொடர் அமைந்துள்ளது. நாட்டின் கரையோரத்தில் அமைதியான சூழ்நிலையும் அழகான கடல் கால்வாய்களும் பனிப்பாறைகளும் 'அட்டகாமா' பாலைவனமும் காணப்படுகின்றன. நாட்டின் உட்பகுதி பெரும்பாலும் மலைத்தொடர்களால் நிறைந்துள்ளது. தென்பகுதியில் ஏரிகள் பலவும் உள்ளன.

**மொத்தப்பரப்பு:** 292,260 ச.மைல் (756,950 ச.கி.மீற்றர்).
**நிலப்பரப்பு:** 289,112 ச.மைல் (748, 800 ச.கி.மீற்றர்).
**நிலப்பிரிவுகள்:** 13 பிராந்தியங்கள்.
**தலைநகரமும் பெரிய நகரமும்:** சன்டியாகோ.
**ஏனைய பெரிய நகரங்கள்:** வினா டெல் மார், வல்பரைசோ, டல்காஹுவானோ, டெமுகோ, கொன்செப்ஷன்.
**உயர் மலைச்சிகரம்:** நெவாடோ ஓஜெரஸ் டெல் சலாடோ (6,880 மீற்றர்).
**தாழ்மையம்:** பசுபிக் சமுத்திரம்.











**மக்கள்தொகை** (2010):16,746,491.
**நாணயம்:** சிலியன் பெசோ.
**மொழி:** ஸ்பெனிஷ் (ஸ்பானிய மொழி).
**இனக்குழுவினர்கள்:** வெள்ளையர் மற்றும் வெள்ளை-அமெரிண்டியன் 95%, அமெரிண்டியன் 3%, ஏனையோர் 2%.
**சமயங்கள்:** ரோமன் கத்தோலிக்கம் 89%, புரட்டஸ்தாந்து கிறிஸ்தவம் 11%, சிறியளவில் யூத மதம்.
**எழுத்தறிவு** (2006): 96%.
**இணையத்தள குறியீடு:** .cl
**தொலைபேசி குறியீட்டு இலக்கம்:** +56.
**தேசிய கீதம்**
Puro, Chile, es tu cielo azulado.
Puras brisas te cruzan también.
Y tu campo de flores bordado
Es la copia feliz del Edén...
என ஆரம்பமாகின்றது.


தலைநகரின் வான்வழித் தோற்றம்


சென்டா லூசியா ஹில் பூங்கா

## வரலாறு

சிலி நாட்டின் வடபகுதி இன்கா நாகரிகத்தின் கட்டுப்பாட்டில் இருந்தது. தென்பகுதி ஆராயுகெனொஸ் எனும் பூர்வீக குடிகளின் ஆதிக்கத்தில் இருந்தது. கி.பி.1541 இல் ஸ்பானியரான பீட்ரோ டி வெல்டிவியா, இந்நாட்டின் இன்றைய தலைநகர் சன்டியாகோவை கண்டுபிடித்தார். அதன்பின் இப்பிரதேசம் முழுவதும் ஸ்பானியரின் ஆதிக்கத்தின்கீழ் வந்தது. 1818 பெப்ரவரி 12 ஆம் திகதி ஸ்பெய்னிடமிருந்து சுதந்திரம் அடைந்தது. 1844 ஆம் ஆண்டு இதன் சுதந்திரம் முழுமையாக அங்கீகரிக்கப்பட்டது.

1891 இல் நாடாளுமன்ற ஜனநாயக முறை ஆட்சி நடைமுறைக்கு வந்தது. 1925 இல் அதற்கான சட்ட ரீதியான அங்கீகாரத்திற்குரிய அரசியலமைப்பு உருவாக்கப்பட்டது. 1970 இல் இடதுசாரி மார்க்ஸிய கொள்கையைக்கொண்ட சல்வடோர் அலண்டே ஜனாதிபதியானார். அலண்டே ஆட்சிக்கு வந்த குறுகிய காலத்தில் மார்க்ஸிய சமூக, பொருளாதாரக் கோட்பாடுகளை நாட்டில் அறிமுகப்படுத்தினார். தனியாருக்குச் சொந்தமான பல கம்பனிகளை தேசிய மயமாக்கினார். 1973 செப்டெம்பரில் அமெரிக்க உளவுத் தாபனமாகிய (CIA) சி.ஐ.ஏ.யின் உதவியுடன் சல்வடோர் அலண்டே கொல்லப்பட்டார். 1980 செப்டெம்பர் 11 முதல் சிலியில் புதிய அரசியலமைப்பு நடைமுறைப்படுத்தப்பட்டது.


ஜனாதிபதி


பெலசியோ டி லா மொனேடா (அரச அலுவலகம்)

**வானொலி ஒலிபரப்பு நிலையங்கள்** (1998): AM 180, FM 64, SW 17. **தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள்:** 63. **இணையத்தள வழங்குனர்கள்** (2006): 506,055; இணையத்தள பாவனையாளர்கள்: 6.7 மில்லியன்.

## போக்குவரத்து

**புகையிரதப் பாதைகள்** (2005): மொத்தம் 6,585 கி.மீற்றர். **பெருந்தெருக்கள்** (2001): மொத்தம் 79,605 கி.மீற்றர். **நீர்வழிப் போக்குவரத்து:** 725 கி.மீற்றர். **துறைகளும் துறைமுகங்களும்:** அண்டோ ஃபகஸ்ட்டா, எரிக்கா, ஹியூஸ்கோ, இக்குய்கு, லிர்கியூன், சென் அன்டோனியோ, சென் விசென்டி,வல்பரைசோ. **விமான நிலையங்கள்** (2006):36.

## பொருளாதாரம்

**விவசாயம்** (பயிர்ச்செய்கை நிலம்: 3%) **மற்றும் விலங்கு**


நெவாடோ ஓஜெரஸ் டெல் சலாடோ (உயர் மலைச்சிகரம்)

**வேளாண்மை:** திராட்சை, அப்பிள், வெங்காயம், கோதுமை, சோளம், அவரை, மாட்டிறைச்சி, கோழி இறைச்சி, கம்பளி, மீன், பெறுமதிமிகு மரங்கள். **கைத்தொழில்கள்:** கனிமவளங்கள், உணவுப்பொருட்கள், மீன் உணவுகள், தளபாடப்பொருட்கள், சீமெந்து, புடவை. **இயற்கை வளங்கள்:** செம்பு, பெறுமதிமிக்க மரங்கள். இரும்புருக்கு, நீர்மின்வலு. **ஏற்றுமதிகள்** (2009): செம்பு, பழங்கள், மீன் உற்பத்திகள், ரசாயனப்பொருட்கள். **இறக்குமதிகள்** (2009): பெற்றோலியம் மற்றும்


டோர்ஸ் டெல் பேண் தேசிய வனம்

பெற்றோலிய உற்பத்திப்பொருட்கள், இயந்திரங்கள், வாகனங்கள், இயற்கை வாயு. **முக்கிய வர்த்தகப் பங்காளிகள்** (2004): ஐக்கிய அமெரிக்கா, ஜப்பான், சீனா,தென் கொரியா, நெதர்லாந்து, பிரேசில், இத்தாலி, மெக்ஸிகோ, ஆர்ஜன்டினா.

## கலாசாரம்


பழமையான ஹோமோஜீனியஸ் சமூக கலாசார கட்டமைப்புகள் இன்றும் சிலியில் பேணப்பட்டு வருவதோடு, அதன் தாக்கங்களையும் பெருமளவில் காணலாம். தவிர, ஐரோப்பிய குடியேற்ற காலத்தில் ஸ்பானிய கலாசார தாக்கங்கள் ஏற்பட்டன.

## காலநிலை

வடக்கு மற்றும் தெற்குப் பிரதேசங்களுக்கிடையே, பாரிய காலநிலை வேறுபாடுகள் காணப்படுகின்றன. செப்டெம்பர் முதல் நொவெம்பர் வரை வசந்தகாலமாகும். டிசம்பர் முதல் பெப்ரவரி வரை உலர்ந்த வெப்பம் நிறைந்த கோடைகாலம் நிலவுகின்றது. மார்ச் முதல் மே வரை படிவுவீழ்ச்சி காணப்படும்.

## தொடர்பாடல்

**தொலைபேசிகள் (2005):** பிரதான தொலைபேசி பாவனையாளர்கள்: 3.436 மில்லியன்; செல்லிடத் தொலைபேசி பாவனையாளர்கள்: 10.57 மில்லியன்.


ஈஸ்டர் தீவிலுள்ள கற்சிலைகள்

## பிரசித்தி பெற்ற இடங்கள் சில....

- லா போர்ட்டா இயற்கைச் சின்னம்
- லவுகா தேசிய வனம்
- ஈஸ்டர் தீவு
- சென்டா லூசியா ஹில் பூங்கா
- சன்டியாகோ நகரசபை அரங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலநிலை தகவல்கள்

எமது முன்னோர்கள் இயற்கையுடன் ஒன்றிணைந்த வாழ்க்கையை வாழ்ந்துள்ளனர். அதனால், இயற்கையில் ஏற்படும் துல்லியமான மாற்றங்களை அறிந்து அதன்படி செயற்பட்டனர். சுற்றுப்புறச் சூழலை நன்கு அவதானித்ததன் ஊடாக, இயற்கையில் நிகழும் மாற்றங்களை தெரிந்து வைத்திருந்தனர். அந்தவகையில், இலங்கையின் காலநிலை பற்றிய விபரங்களை இங்கு பார்ப்போம்





## நொவெம்பர் மாத காலநிலை

இது நொவம்பர் மாதமாகும். ஒக்டோபர், நொவெம்பர் மாதங்களில் இலங்கைக்கு மழைவீழ்ச்சி கிடைக்கும் காலங்களாகும். வடமேற்கு, தென்கிழக்கு பருவப்பெயர்ச்சி மழைக் காலத்திற்கு இடைப்பட்ட காலமாகும்.

## ஒக்டோபர் - நொவெம்பர்

- பகல் பொழுதில் கடும் வெப்பம் காணப்படும்.
- வெப்பம் தரையிலிருந்து மேல் நோக்கிச் செல்லும்.
- அனேகமாக, மாலை 2 மணி முதல் 5 மணிவரை மழை பெய்யும்.
- மாலை 4 மணி முதல் 6 மணிவரை இடியுடன் கூடிய மழை பெய்யும்.
- கடும் காற்று வீசும்.
- வங்காள விரிகுடாவில் தாழமுக்கம் ஏற்படுவதால், இலங்கையின் அனைத்துப் பகுதிகளுக்கும் மழைவீழ்ச்சி கிடைக்கும்.

## பருவப்பெயர்ச்சி மழையின் தாமதம்

இம்முறை ஒக்டோபர் மாதம் கிடைக்கவேண்டிய பருவப்பெயர்ச்சி மழை தாமதமாகவே கிடைத்துள்ளது. இத்தகைய தாமதத்தால் சூழலில் அதிக வெப்பநிலை நிலவியது. இலங்கையில் பல பிரதேச மக்களும் ஏனைய உயிரினங்களும் பெரும் இன்னல்களை எதிர்நோக்க வேண்டிய நிலை காணப்பட்டது.

## உலகளாவிய வெப்பநிலை அதிகரிப்பு ஒரு காரணம்

பருவப்பெயர்ச்சி மழை தாமதமடைவதற்கு உலகளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள வெப்பநிலை அதிகரிப்பும் ஒரு காரணமாகும். ஆபிரிக்காவில் ஏற்பட்ட கடும் வறட்சியும், தாய்லாந்தில் ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கும் இதன் விளைவுகளாகும்.



வளிமண்டலத்தில் வெப்பநிலை அதிகரிப்புக்கு மனித செயற்பாடுகளே காரணமாகும். எரிபொருள் பாவனையினால் ஏற்படும் காபனீரொட்சைட் அதிகரிப்பு இதற்கு முக்கிய காரணமாக இருக்கின்றது.

இத்தகைய காலநிலை மாற்றங்களினால் ஏற்படும் மழை தாமதமடைதல், வறட்சி போன்ற பிரச்சினைகளால் விவசாயம் மிகுந்தளவில் பாதிக்கப்பட்டுள்ளது.

## பிலிப்பைன்ஸில் தாழமுக்கம்

பருவப்பெயர்ச்சி மழை தாமதமடைவதற்கு தென்கிழக்குப் பருவக்காற்று தீவிரமடைந்ததே காரணமாகும். பிலிப்பைன்ஸ் நாட்டிற்கு அண்மித்த பிராந்தியத்தில் வெப்பநிலை அதிகரிப்பு தொடர்ச்சியாக இடம்பெற்றதால், அங்கு தாழமுக்கம் ஏற்பட்டது. வெப்பநிலை அதிகரிப்பினால் இவ்வாறு தாழமுக்கம் ஏற்படுவது சகஜமானதே. இதனால், இப்பகுதியை நோக்கி காற்று ஈர்க்கப்பட்டது. இதன்விளைவாக, இலங்கையின் கடல் பகுதியைக் கடந்து தென்கிழக்குப் பருவக்காற்று வீசியது இதனால் பருவப்பெயர்ச்சி மழை தாமதமடைந்தது.


# KALAIMAGAL International College

NOTHING IS IMPOSSIBLE

இலங்கை கல்வித்துறையில் சிறந்த பெறுபேறுகளை ஈட்டிக்கொள்ளும் மாணவர்கள் செறிந்து வாழும் வடபகுதியில் சர்வதேச மொழியான ஆங்கில மொழி மூல சர்வதேச பாடசாலை.

- இலங்கை கல்வித் திணைக்களம், இலங்கைபரீட்சைத் திணைக்களம் ஆகியவற்றில் உரிய முறையில் பதிவுசெய்யப்பட்ட முழு நேர தனியார் பாடசாலை .(English medium)
- Play group முதல் Grade-05 வரை Oxford பாடத் திட்டமும் Grade-6 முதல் G.C.E (A/L) வரை இலங்கை பாடத்திட்டமும் நடைமுறைப்படுத்தப்படும்
- தமிழ், சமயம் ஆகிய பாடங்கள் தமிழ்மொழிமூலமும் ஏனைய அனைத்துப் பாடங்களும் ஆங்கில மொழிமூலமும் சிங்களம் விருப்பத்துக்குரிய பாடமாகவும் காணப்படும
- அரச பாடசாலைகளின் நேரசூசியும் பின்பற்றப்படும் ➢ கலை, கலாசாரம், விளையாட்டு. நிகழ்வுகளை கல்விசார் செயற்பாடாக உள்வாங்கும் அமைப்பு.
- மாணவர்களின் திறன்களை வெளிக்கொணரும் வருடாந்த பரிசளிப்பு விழா, கலைவிழா என்பன உள்வாங்கப்பட்ட அமைப்பு.
- நூலகம்
- பிரத்தியேக சீருடை
- கணணி ஆய்வுகூடம்
- விஞ்ஞான ஆய்வுகூடம்
- மிகக்குறைந்த கட்டண வசதி
- சிறார்களுக்கான சிறுவர் பூங்கா
- சர்வதேச தரம் வாய்ந்த வகுப்பறை வடிவமைப்பு
- ஆங்கில மொழிமூலம் பயிற்றப்பட்ட தரம் வாய்ந்த ஆசிரியர் குழாம்

இன்னும் பல அரிய செயற்பாடுகளுடன் இயங்கும் எமது கல்லூரியின் பிரதான கிளைகள் சாவகச்சேரி, கொக்குவில், நெல்லியடி ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டும் கிளைகளில் மட்டும் முன்பள்ளி முதல் க.பொ.த (உ/த) வரையிலான வகுப்புகள் உள்வாங்கப்பட்டும் உள்ளன.ஏனைய அச்சுவேலி, மானிப்பாய், பருத்தித்துறை கொடிகாமம், நல்லூர் கிளைகளில் play Group L.K.G, U.K.G போன்ற வகுப்புகள் மட்டுமே ஆரம்பிக்கப்பட உள்ளன. இக்கிளைகளில் இணைந்து கொள்ளும் சிறார்கள் தமது மேல் வகுப்புகளுக்கு கிட்டிய பிராதன கிளைகளில் ஒன்றில் இணைந்து கற்கக்கூடிய வகையில் எமது வட மாகாண செயற்திட்டம் காணப்படுகிறது.

The Director:
**Kalaimagal International College**
Church Lane, K.K.S Road. Kokuvil
T.P: 021 4923238, 077 4904286, 077 8834592

**Chavakachcheri:**
Nunavil East, Kandy Road,
Chavakachcheri

**Uduppidy:**
Thula veethy,Imayan West,
Uduppidy

**Velanai:**
Amman Veethy, Velanai West,
Velanai-8

**Galaha:**
72, Pupurassa Road,
Galaha,Kandy


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் - II

பெயர்: ..................................... நேரம்: 1 மணித்தியாலம் 15 நிமிடங்கள்

★ *பின்வரும் பத்திரிகைச் செய்தியை வாசித்து, (1) முதல் (10) வரையிலான வினாக்களுக்கு விடை தருக.*

மலையகத்தில் ஒரு மாத காலமாகத் தொடர்ந்து மழைபெய்து வருகிறது. ஆனால், கடந்த திங்கட்கிழமை பெய்த அடைமழை பெரும் அனர்த்தத்தை ஏற்படுத்தியுள்ளது. அங்காங்கே மண்சரிவுகளும் பாரிய வெள்ளப்பெருக்கும் ஏற்பட்டுள்ளன. இதனால், மக்கள் மிகுந்த துன்பத்தில் ஆழ்ந்தனர்.

சபரிமலைப் பிரதேசத்தில் அன்றைய தினம் அதிகாலையிலிருந்து பெய்த அடைமழையினால் சுமார் 15 அடி உயரத்திற்கு எழுந்த வெள்ளப்பெருக்கில் 'கிறீன்லைட்' கொலனியிலிருந்த 16 வீடு வாசல்கள் முற்றாக மூழ்கி பெரும் சேதத்தை எதிர்கொண்டன. காலையில் இருந்து பெய்த மழையினால் மஸ்கெலியா ஓயா பெருக்கெடுத்ததாலேயே இந்த அனர்த்தம் நேர்ந்துள்ளது.

01. 'அன்றைய' என்பதன் எதிர்ப்பதம் யாது? (..............................)
02. இங்கு கூறப்பட்டுள்ள இணைமொழி ஒன்றை எழுதுக. (..............................)
03. 'சுமார்' என்பதன் ஒத்த பதம் யாது? (..............................)
04. 'பாரிய வெள்ளப்பெருக்கும் ஏற்பட்டுள்ளது' என்பதை எதிர்கால வாக்கியமாக மாற்றி எழுதுக..............................................................
05. இங்கு கூறப்பட்ட அனர்த்தம் நேர்வதற்கான முக்கிய காரணி எது?(..............................)
06. இடப் பெயர்ச்சொல் ஒன்றை எழுதுக. (..............................)
07. 'விட்டது' என்பதை பன்மைச் சொல்லாக மாற்றி எழுதுக. (..............................)
08. இங்கு கூறப்பட்ட உயர்திணை, பன்மை, படர்க்கைச் சொல்லை எழுதுக. (..............................)
09 உயர்திணை, இறந்தகால வினைச்சொல்லை எழுதுக. (..............................)
10. இங்கு கூறப்பட்ட இரு அனர்த்தங்களை எழுதுக. (..............................)

**02) கீழே தரப்பட்டுள்ள மாறிக்கிடக்கும் சொற்களைப் பயன்படுத்தி, நான்கு சொற்களுடைய இரு வாக்கியங்களாக்கி எழுதுக.**

அதிபர், நாங்கள், சென்றோம், பார்வையிட, தெருவோரமாக, நடந்து, வந்தார், வகுப்பறையை

1. ..............................................................
2. ..............................................................

**03) பின்வரும் வினாக்களில் கோடிட்ட இடத்தில் வரவேண்டிய சரியான விடையைத் தெரிவுசெய்து எழுதுக.**

1. பண்டைய இலங்கை பல .............................. (இராட்சியங்களாகப்/இராச்சியங்களாகப்) பிரிக்கப்பட்டு இருந்தது.
2. கமலன் கதவை .............................. (திறப்பால்/துறப்பால்) திறந்தான்.

**04) பின்வரும் பழமொழியினதும் உவமைத்தொடரினதும் கருத்தை எழுதுக.**

1. எய்தவன் இருக்க அம்பை நோவான் ஏன்?
..............................................................
2. இலை மறை காய் போல.
..............................................................

**05) சிங்கள வாக்கிய உச்சரிப்புக்களின் கருத்தை தமிழில் எழுதுக.**

1. சு(b)ப உபன்தியனக் வேவா : ..............................
2. ஹுங்(g)கக் கல் ஜீவத் வேவா : ..............................

**06) பின்வருவனவற்றிற்குரிய கருத்தை தமிழில் எழுதுக.**

1. may I come in? : ..............................
2. where are you going? : ..............................

**07) பின்வருவனவற்றிற்குரிய சிங்கள உச்சரிப்பைத் தமிழ் எழுத்துக்களால் எழுதுக.**

1. நான் பாடசாலைக்குச் சென்றேன் : ..............................
2. அங்கே செல்லுங்கள் : ..............................

**08) கீழே தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை ஆங்கிலத்தில் எழுதுக.**

1. இங்கே வா : ..............................
2. தயவுசெய்து அங்கே செல் : ..............................

★ *9 முதல் 25 வரையிலான வினாக்களுக்கு சரியான விடையைத் தெரிவுசெய்து கோடிடுக.*

**09) முட்கள் போன்ற அமைப்புடன் காணப்படும் வித்து;**

1. நெருஞ்சி 2. குருவிச்சை 3. புன்னை

**10)**  **இங்கு காணப்படும் தாவரத்தின் சிறப்பியல்பு;**

1. நீண்டு வளரக்கூடியது 2. பூச்சிகள் உண்ணக்கூடியது
3. சூரியஒளி இன்றி வளரக்கூடியது




**11 குஞ்சுகளை செட்டையினுள் வைத்துப் பாதுகாப்பது;**

1. வான்கோழி 2. குருவி 3. காகம்

**12) தபால் அட்டை ஒன்று அனுப்ப வேண்டுமாயின் அதன் பெறுமதி;**

1. ரூபா 5.00 2. ரூபா 4.50 3. ரூபா 4.00

**13) நீண்டகாலம் அழியாமல் சூழலுக்குத் தீங்கு ஏற்படுத்தும் பொருள்;**

1. பிளாஸ்டிக் பாத்திரம் 2. கடதாசிப்பை 3. தேங்காய்ச்சிரட்டை

**14) சிறுதுண்டுகளாகச் சீவி வெயிலில் காய வைத்துப் பாதுகாக்கும் உணவு;**

1. ஈரப்பலாக்காய் 2. பலாச்சுளை 3. கொய்யாக்காய்

**15) இரத்தினபுரிப் பகுதி 'சப்ரகமுவ' என அழைக்கப்படுவதற்குக் காரணம்;**

1. ஆதிக்குடிகள் காணப்பட்டமை 2. இரத்தினக்கற்கள் காணப்பட்டமை
3. சிங்கள மக்கள் வாழ்ந்தமை

**16) இலங்கையில் புனித வெள்ளரசு மரம் உள்ள இடம்;**

1. கம்பளை 2. மிகிந்தலை 3. கண்டி

**17)**  **படத்தில் காட்டப்பட்டுள்ள போத்தலை சிறிது சரித்தால் அதன் நீர்மட்டம் இருப்பதைக் காட்டும் சரியான படம் எது?**

1.  2.  3. 

**18) தேசப்படங்களில் பாலத்தைக் குறித்துக்காட்ட பயன்படுத்தும் வர்ணம் எது?**

1. சிவப்பு 2. நீலம் 3. கறுப்பு

**19)**  **இங்கு காணப்படும் விளையாட்டு;**

1. கரப்பந்தாட்டம் 2. வலைப்பந்தாட்டம்
3. கூடைப்பந்தாட்டம்

**20) 'தரம் 05 இல் கல்வி கற்கும் ரமேஸ் பல், எலும்பு வளர்ச்சி பாதிக்கப்பட்டவனாகக் காணப்பட்டான்'. இக்கூற்றிற்கு பின்வரும் எந்தக் கனியுப்புக் குறைபாடு காரணமாக அமைந்திருக்கும்?**

1. சோடியம் 2. அயடின் 3. கல்சியம்

**21) பாம்பு கடித்த ஒருவருக்கு பயத்தைப் போக்கி சாய்வாகக் கிடத்திய பின் செய்யவேண்டிய முதலுதவி எது?**


1. காயத்தை சவர்க்காரம் இட்டுக் கழுவுதல்
2. கடிபட்ட இடத்திற்கு சற்று மேலாக கயிற்றினால் சற்று இறுகக்கட்டுதல்
3. நீர் அருந்தக் கொடுத்தல்

**22)**  **இவ்வுருவில் காட்டப்பட்டுள்ள விளையாட்டுக்களைக் காணக்கூடிய மாதம் எது?**

1. ஜனவரி 2. ஏப்ரல் 3. டிசம்பர்

**23)**  **இக்குறியீடு குறிப்பது;**

1. ஒலி எழுப்பத்தடை 2. வாத்தியங்கள் கொண்டுசெல்லத்தடை
3. ஒலி எழுப்பலாம்

**24)**  **இங்கு மின்குமிழை ஒளிரச் செய்ய மூன்று வயர்த் துண்டுகள் மட்டும் பயன்படுத்தப்பட வேண்டும் எனின், ஒளிரச் செய்யும் முறையை வரைந்து காட்டுக.**

★ *25 முதல் 29 வரையிலான வினாக்களுக்கு தரப்பட்ட தாவரங்களின் பெயர்களை அடைப்புக்குள் இருந்து தெரிவுசெய்து எழுதுக.*

குப்பைமேனி, ஆமணக்கு, துளசி, வல்லாரை, அலரி

25).................. 26).................. 27).................. 28) ............. 29)...............

மிகுதி அடுத்த இதழில் வெளிவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காய்கறிகள், பழங்களிலுள்ள நச்சுத்தன்மையை நீக்குவது எவ்வாறு?

**ஆரோக்கியமான வாழ்க்கையே நமது உண்மையான சொத்தாகும். அந்தவகையில், நாம் உட்கொள்ளும் உணவுகள் எமது ஆரோக்கியத்தில் அதிக செல்வாக்குச் செலுத்துகின்றன. ஆனாலும், நாம் உணவாகக் கொள்ளும் பழங்கள், காய்கறிகள், தானிய வகைகள் போன்றவை அழுகிவிடாமலும் புதியவையாகக் காட்சி அளிப்பதற்காகவும் தற்காலத்தில் இரசாயனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இதன் காரணமாக இவற்றின் ஆரோக்கியத் தன்மை குறித்து கேள்வி ஏற்பட்டுள்ளது**

எமக்கு அவசியமான காய்கறி, பழங்களை வீட்டில் வளர்ப்பதற்கான வசதிகள் அமையாத நிலையில், இவற்றை நாம் சந்தையில் இருந்து கொள்வனவு செய்ய வேண்டிய நிலை உள்ளது. எனினும், இவ்வாறு கொள்வனவு செய்யப்படும் காய்கறிகள், பழங்களில் தெளிக்கப்பட்டுள்ள இரசாயனங்களை நீக்குவதற்கும் காய்கறிகள், தானியங்கள் பயிரிடப்படும் போது விசிறப்படும் கிருமிநாசினிகளை நீக்குவதற்கும் பல வழிமுறைகள் உள்ளன.

## காய்கறிகள், பழங்களூடாக வயிற்றுக்குள் செல்லும் நச்சுக்கள்

பயிர்கள் விளையும்போது பல்வேறு விதமான பூச்சிகள், பூஞ்சணங்கள், பக்றீரியாக்கள் என்பனவற்றால் அவற்றுக்கு தாக்கங்கள் ஏற்படுகின்றன. இவற்றுக்கு தீர்வு காண்பதற்காக கிருமிநாசினிகள் பயன்படுத்தப்படுகின்றன. எனினும், உணவுப் பயிர்களுக்கு கிருமிநாசினிகள், களைக்கொல்லிகள் தெளிக்கும்போது, பின்பற்றப்பட வேண்டிய ஓர் அணுகுமுறை உண்டு. ஆனால், அமோக விளைச்சலை எதிர்பார்க்கும் விவசாயிகள் பலர் இது குறித்து பெரிதும் அக்கறை கொள்வதில்லை. இதனால்,தவறான முறையில் கிருமிநாசினிப் பிரயோகம் இடம்பெறும் சாத்தியங்கள் அதிகரிக்கின்றன. அந்த வகையில்...

* தெளிக்க வேண்டிய குறித்த அளவுக்கு மீறியதாக கிருமிநாசினிகள், மருந்துகளைத் தெளித்தல்.
* அறுவடையை அண்மித்த காலத்தில் கிருமிநாசினிகளைத் தெளித்தல்.
* கிருமிநாசினிகளின் ஆயுள்காலம் (தெளிக்கப்பட்ட பின்பு நச்சுத்தன்மை இருக்கும் காலப்பகுதி) குறித்து அக்கறை செலுத்தாமை போன்ற தவறுகள் இடம்பெறுகின்றன.

## உங்களுக்குத் தெரியுமா?

பயிர்களுக்குக் கேடு விளைவிக்கும் பூச்சிகளின் உடல் செயற்பாடு கிருமிநாசினிகளூடாக பாதிப்படையச் செய்யப்படுகின்றது. கிருமிநாசினிகளில் உள்ள கெட்மியம், ஈயம் போன்ற உலோகங்கள் இதற்கு காரணமாக அமைகின்றன. நாம் உணவில் சேர்த்துக்கொள்ளும் காய்கறிகள், பழங்களில் இந்த கிருமிநாசினி பதார்த்தங்கள் இருப்பின் அவை இலகுவாக எமது உடலைச் சென்றடைந்துவிடும் சந்தர்ப்பங்கள் அதிகமாகவே உள்ளன. இதனால், பல நோய்கள் எமக்கு ஏற்படும்.

இதன் காரணமாகவே, கிருமிநாசினிகள் அற்ற காய்கறிகளை, பழங்களை உட்கொள்ள நாம் முயல வேண்டும். அத்துடன், காய்கறிகள் மற்றும் பழங்களில் இருக்கும் கிருமிநாசினிகளை அல்லது இரசாயனங்களை முடியுமான வரை நீக்கிக்கொள்ளும் உத்திகளைக் கையாள வேண்டும். நாம் உண்ணும் உணவுகளில் (காய்கறிகள், பழங்கள், கீரைகள், தானியங்கள்) காபன் அடங்கியுள்ளது. காபன் மூலக்கூறுகளினாலேயே இவை உற்பத்தியாகின்றன. காய்கறிகளுக்கும் பழங்களுக்கும் தெளிக்கப்படும் கிருமிநாசினிகள் இந்த காபன் கூறுகளுடன் விரைவில் கரைந்து-கலந்து விடுகின்றன. எனவே, கிருமிநாசினிகள் தெளிக்கப்பட்ட காய்கறிகள் மற்றும் பழங்களை உட்கொள்வதால் குறித்த நச்சுப் பதார்த்தங்கள் எமது உடலைச் சென்றடைகின்றன.





## நீரில் கரையும் கிருமிநாசினிகளை நீக்கும் முறை

* **சுத்தமான நீரில் கழுவுதல்:** காய்கறிகள், பழங்கள், தானியங்கள் ஆகியவற்றை சுத்தமான நீரில் பல முறைகள் கழுவும்போது, அவற்றின் மேற்பகுதியில் இருக்கும் நீரில் கரையும் கிருமிநாசினிகள் அகன்றுவிடும்.

## காபன் மூலக்கூறுகளில் கரையும் கிருமிநாசினிக் கலவைகளை அகற்றும் வழிமுறைகள்

காபன் மூலக்கூறுகளில் கரையும் கிருமிநாசினிக் கலவைகளை சுத்தமான நீரில் கழுவி அகற்றிவிட முடியாது. அதற்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள முறைகளில் ஏதேனும் ஒன்றினைப் பின்பற்ற வேண்டும்.




* **காய்கறிகள், பழங்களை துண்டு துண்டாக நறுக்கிவிட்டுக் கழுவுங்கள்:** காய்கறிகளையும் பழங்களையும் சிறிய துண்டாக நறுக்கிக் கழுவுவதால் அவற்றின் சத்துக்கள் வீணாகின்றன. ஆனாலும், கிருமிநாசினிக் கலவைகளை அகற்ற வேண்டுமாயின், அவற்றை நறுக்கிவிட்டுத்தான் கழுவ வேண்டும். இதற்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள வழிமுறையைப் பின்பற்றுங்கள்.

சுத்தமான நீர்- 1 கோப்பை, வினாகிரி - 2 தே.கரண்டி என்பவற்றை கலந்து பழங்களை, காய்கறிகளை அதில் கழுவுங்கள். இதன்போது, நீரின் ph அளவு குறைவதால் (வினாகிரி கலவையினால்) கிருமிநாசினிக் கலவைகளை அகற்ற முடியும்.

## கிருமிகள், பக்றீரியாக்களை அகற்றும் முறை

கீரை வகைகளை சமைப்பதற்கு முன்னர் உப்பு நீரில் நன்கு கழுவி 5-10 நிமிடங்கள் அவற்றை அதில் அமிழ்த்தி வைக்க வேண்டும். இந்த முறையை நம் முன்னோர்கள் பின்பற்றியுள்ளனர். எனினும், தற்போதைய அவசர காலத்தில் கீரை வகைகளை நன்கு கழுவும் வழக்கமும் குறைந்து வருகின்றது. உப்பு நீரில் இவ்வாறு அமிழ்த்தி வைப்பதனால் பக்றீரியாக்கள் இறந்து விடுகின்றன.

வினாகிரி மற்றும் நீரை 1:3 என்ற விகிதத்தில் கலந்து அக்கரைசலில் நறுக்கப்பட்ட காய்கறிகளை முதலில் கழுவுங்கள். பின்பு சுத்தமான நீரில் நன்கு கழுவி விடுங்கள்.


சிட்ரிக் அமிலம் (எலுமிச்சம்பழச் சாறும் உகந்தது) மற்றும் நீரை 1:3 என்ற விகிதத்தில் கலந்துகொள்ளுங்கள். சிட்ரிக் அமிலத்தினை கடைகளில் வாங்கலாம். நறுக்கப்பட்ட காய்கறிகளை அந்தக் கலவையில் கழுவிவிட்டு பின்பு சுத்தமான நீரில் கழுவிக்கொள்ளுங்கள்.

எலுமிச்சம்பழச் சாறு 1 தே.கரண்டி, பேக்கிங் சோடா 2 தே.கரண்டி, நீர் ஒரு கோப்பை என்பவற்றை நன்கு கலந்துகொள்ளுங்கள். அதன்பின் காய்கறி, பழங்கள் என்பனவற்றை 5 முதல் 10 நிமிடங்கள் அக்கலவையில் அமிழ்த்தி வையுங்கள். அதன்பின் சுத்தமான நீரில் கழுவுங்கள். காய்கறிகள், பழங்களில் பேக்கிங் சோடா இருந்தால் வயிற்றோட்டம் ஏற்படலாம். அதனால், பேக்கிங் சோடா நீங்கும்வரை பழங்கள் மற்றும் காய்கறிகளைக் கழுவுங்கள்.

**வெள்ளை வினாகிரி (வினாகிரி தயாரிக்கும் இடங்களில் வாங்கலாம்) 2 தே. கரண்டி, எலுமிச்சம்பழச் சாறு 2 தே. கரண்டி, நீர் 1 கோப்பை என்பனவற்றை கலந்து காய்கறிகளை, பழங்களை அந்த கலவையில் அமிழ்த்தி வைத்துக் கழுவிக் கொள்ளுங்கள்.**

(இ)







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அன்றிலிருந்து இன்றுவரை உலகில் ஏராளமான சிறுவர் இலக்கியங்கள் எழுத்தாளர்களால் எழுதப்பட்டு வருகின்றன. அந்தவகையில், உலகப் புகழ்பெற்ற சிறுவர் கதைகள் சிலவற்றைப் பற்றியும் அவற்றை எழுதிய எழுத்தாளர்கள் பற்றியும் கடந்த 'விஜய்' இதழில் நோக்கினோம். இந்த இதழில் மேலும் பல சிறுவர் இலக்கியங்கள் பற்றியும் அவற்றின் எழுத்தாளர்கள் பற்றியும் நோக்குவோம்**

# உலகப் புகழ் பெற்ற


வெண்டியைக் காப்பாற்றுவதற்காக, கெப்டன் ஹூக்குடன் சண்டையிடும் பீட்டர் பேண்


ரோல்ட் டால்


எல்.ஃபிரேங் போம்


சார்ள்ஸ் லுட்விஜ்


ஜே.கே.ரோவ்லிங்


ஜே.ஆர்.ஆர்.டோல்கின்

## கற்பனைக் கதைகள் (Fantasy Stories)

19 ஆம் நூற்றாண்டு வரை படிப்பினைகளைப் புகட்டிய சிறுவர் கதைகள், ஹான்ஸ் கிறிஸ்டியன் எண்டர்சனின் வருகையின் பின் பல்வேறுபட்ட கற்பனைக் கதைகளைக் கொண்டவையாக மாறின. அவை மிகவும் பிரபல்யமும் அடைந்தன. இன்றுவரை அந்த கதைகளை மையமாக வைத்து திரைப்படங்கள், திரைத்தொடர்கள்; மேடைநாடகங்கள் போன்றன இயக்கப்படுகின்றன.

**❖ விநோத தேசம் சென்ற எலிஸ்:**

1865 ஆம் ஆண்டு சார்ள்ஸ் லுட்விட்ஜ் டொக்சன் (Charles Lutwidge Dodgson), லுவிஸ் கெரோல் எனும் புனைபெயரில் எழுதிய 'எலிஸ் இன் வொன்டர்லேன்ட்' (Alice in Wonderland) எனும் கதை, பலரது மனதிலும் நிரந்தரமாக இடம்பிடித்துக்கொண்டது. இந்தக் கதையை அடிப்படையாக வைத்து ஏராளமான திரைப்படங்கள் வெளிவந்தன. இந்த வரிசையில் இறுதியாக வெளிவந்த திரைப்படம்தான் 'எலிஸ்'ஸ் எட்வென்ச்சர்ஸ் இன் வொன்டர்லேன்ட்' (Alice's Adventures in Wonderland) இது ஹொலிவுட் இயக்குனர் டிம் பேர்ட்டனின் இயக்கத்தில் வெளிவந்தது. பேசும் முயலொன்றின் பின்னால் செல்லும் எலிஸ் (Alice) என்ற சிறுமி, ஒரு மாயதேசத்தினுள் பிரவேசித்து அங்கு நிகழ்கின்ற சம்பவங்களை மையமாக வைத்து இக்கதை எழுதப்பட்டுள்ளது. இக்கதையின் வெற்றியைத் தொடர்ந்து இதன் இரண்டாம் பாகமும் எழுதப்பட்டது. 'த்ரூ த லுக்கிங்-கிளாஸ் என்ட் வட் எலிஸ் ஃபவுண்ட் தெயார்' (Through the Looking-Glass and what Alice found there) என்பதே அதன் பெயராகும்.

**❖ பீட்டர் பேண்:**


ஸ்கொட்லாந்து எழுத்தாளரான ஜே.எம்.பெரி (1860-1937) என்பவரே முதன்முதலாக 'பீட்டர் பேண்' (Peter pan) கதையை எழுதினார். ஆனால், அது ஒரு நூலாக எழுதப்படவில்லை. மாறாக, ஒரு நாடகமாகவே எழுதப்பட்டது. 1904 ஆம் ஆண்டு ஒரு மேடைநாடகப் பிரதியாக பீட்டர் பேண் தோற்றம் பெற்றது. பீட்டர் எனும் பெயருடைய ஒரு சிறுவன் மாயாஜால சக்திகள் நிறைந்தவன். இவன் தனது நண்பர்களுடன் 'நெவர்லேன்ட்' என அழைக்கப்படும் மாய உலகிற்கு சென்று அங்கு புரியும் வீரசாகசங்களைத்தான் இக்கதை சித்தரிக்கின்றது. பீட்டரின் பரம எதிரியாக 'ஹூக்' எனும் கடற்கொள்ளைக்காரன் திகழ்கின்றான்.


எலிஸ்

**❖ வொண்டர்ஃபுல் விஸர்ட் ஒஃப் ஒஸ்:**

அமெரிக்க எழுத்தாளரான எல்.ஃபிரேங் போம் (L.Frank Baum) (1815-1919), 1900 ஆம் ஆண்டில் உலகிற்கு அளித்த ஒரு கொடையாக இதனைக் கருதலாம். கென்சாசில் வசிக்கும் டொரத்தி (Dorathy) எனும் சிறுமி 'டோர்னாடோ' எனப்படும் புயற்காற்றினால் இழுத்துச் செல்லப்பட்டு ஒரு மாயதேசத்தை அடைகிறாள். இந்த தேசத்தின் பெயர் 'லேன்ட் ஓஃப் ஓஸ்' (Land of Oz) ஆகும். அங்கு அவளுக்கு மூன்று நண்பர்கள் அறிமுகமாகின்றனர். மூளை இல்லை என எண்ணும் ஒரு வெருளி, பயந்த சுபாவம் கொண்ட சிங்கம், இதயம் ஒன்றில்லையே எனக் கவலைப்படும் இரும்பு மனிதன் ஆகியவையே அந்த மூன்று நண்பர்களுமாவர்.

இந்த மூன்று நண்பர்களும் தாம் விரும்புவதைப் பெறுவதற்காகவும் டொரத்தி தனது வீட்டைச் சென்றடைவதற்கான பாதையைப் பற்றி அறிந்து கொள்வதற்காகவும் 'ஒஸ்' தேசத்தின் விஸர்ட் ஓஃப் ஒஸ் எனும் மாயவித்தைக்காரனிடம் செல்கின்றனர். அங்கு பல்வேறு விதமான விநோத வீர செயல்களுக்கு அவர்கள் முகம்கொடுக்கின்றனர். இதையே அக்கதை சித்தரிக்கின்றது. இக்கதையை வாசிக்காதவர்கள்கூட, இதன் திரைப்படத்தைப் பார்த்து மகிழ்ந்தனர். இதற்கு மேலதிகமாக 'ரிட்[illegible] டு ஒஸ்' (Return to Oz) எனும் பெயரில் தொலைக்காட்சித் தொடர்களும் கார்ட்டூன் கதைகள் பலவும் தயாரிக்கப்பட்டன.



விஸார்ட் ஓஃப் ஒஸ்

**❖ டோல்கிங் மற்றும் ஹொபிட்ஸ்:**


அமெரிக்க திரைப்பட வல்லுனரான பீட்டர் ஜெக்சன் இயக்கிய 'லோர்ட் ஓஃப் த ரிங்ஸ்' (Lord of the Rings) என்ற



எலிஸ் இன் த வொண்டர்[illegible]ட் திரைப்படத்தின் சுவரொட்டியொன்று



சார்லி எண்ட் த சொக்லட் ஃபெக்டரி திரைப்படத்தின் சுவரொட்டியொன்று



லோர்ட் ஓஃப் த ரிங்ஸ் திரைப்படத்தின் சுவரொட்டியொன்று



ஹெரி பொட்டர் நூல்கள்


ஹெரி பொட்டர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...ற சிறுவர் இலக்கியங்களும் எழுத்தாளர்களும்

திரைப்படம், திரைப்பட உலகிலேயே ஒரு மைல்கல்லாகத் திகழ்ந்தது. இத் திரைப்படத்திற்கு கருப்பொருளாக அமைந்தது 'லோட் ஒஃப் த ரிங்ஸ்: ஃபெலோஷிப் ஒஃப் த ரிங்' (Fellowship of the Ring), 'டூ டவர்ஸ்' (Two Towers) மற்றும் 'ரிட்டர்ன் ஒஃப் த கிங்ஸ்' (Return of the kings) ஆகிய மூன்று நாவல்களுமாகும். ஜே.ஆர்.ஆர். டோல்கிங் (J.R.R.Tolkien) இவற்றை எழுதினார். 'லோர்ட் ஒஃப் த ரிங்ஸ்' கதைத்தொடரில் ஹொபிட்ஸ் எனும் குள்ள மனிதர்கள் பற்றியே சித்தரிக்கப் படுகின்றது. இந்த நூல் தொடரை படைக்கும் முன்னர் 'ஹொபிட்ஸ்' (Hobbits) எனும் நூலை டோல்கிங் எழுதியிருந்தார். உலக இலக்கியத்தில் இதுவரை வெளியான புகழ்பெற்ற ஜனரஞ்சகமான இலக்கிய நூல்களில் இதுவும் ஒன்றாகப் போற்றப் படுகின்றது. இதனை வைத்து அற்புதமான திரைப்படமொன்றும் உருவாகி வருகின்றது. 'ஹொபிட்ஸ்' (Hobbits) என பெயரிடப்பட்டுள்ள இத்திரைப்படத்தின் இயக்குனராக பீட்டர் ஜெக்சன் பணியாற்றுகிறார்.

*** ஹெரி பொட்டர்:**

1997 இல் பிரித்தானிய எழுத்தாளரான ஜே.கே.ரோவ்லிங் (J.K.Rowling) என்பவரின் முதல் புத்தகமான 'ஹெரி பொட்டர் என்ட் த பிலோசொஃபர்ஸ் ஸ்டோன்' என்ற நூல் எழுதி வெளியிடப் பட்டது. இது திரைப்படமாகும்போது, Harry Potter and the Sorcerer's Stone என்ற பெயரைப் பெற்றது. இந்த வெற்றிகரமான கதைத் தொடரின் ஏழாவது தொடர் 'ஹெரி பொட்டர் என்ட் த டெத்லி ஹெலோவ்ஸ்' (Harry Potter and the Deathly Hallows) எனும் தலைப்பில் திரைப்படமாகவும் வெளிவந்து பெரும் வரவேற்பைப் பெற்றது. இக்கதைத்தொடரின் ஒவ்வோர் அங்கமும் திரைப்படங்களாகவும் எடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் இறுதித் திரைப்படமானது 3D (முப்பரிமாண) தொழில்நுட்பத்துடன் இருபாகங்களாக வெளிவந்திருந்தது. இந்நூல்கள் 46 மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன.


*** ரோல்ட் டால்:**



விலிவொன்காவின் அற்புத பாத்திரங்களைக்கொண்ட 'சாலி எண்ட் த சொக்கலட் ஃபெக்டரி' (1964) எனும் நூல் பிரித்தானிய எழுத்தாளரான ரோல்ட் டால் (Roald Dahl) (1916-1990) என்பவரால் எழுதப் பட்டது. மாயக்கதைகள் எழுதுவதில் ரோல்ட் டாலுக்கு நிகராக எவருமில்லை. 'ஜேம்ஸ் எண்ட் த ஜயன்ட் பீச்' (1961), 'மெட்டில்டா' (1988), 'த பீஎஃப்ஜி' (1989) என்பன அவரின் அபூர்வ படைப்புகளாகும்.

## வீரதீரக் கதைகள் (Adventure Stories)

19 ஆம் நூற்றாண்டில்தான் பெருமளவிலான வீரதீரக் கதைகள் உருவாகின. வீர சாகசங்களால் நிறைந்த இக்கதைகளில் பெரும்பாலும் ஆண்பிள்ளைகளே, வீரர்களாகத் திகழ்ந்தன. 'டொம் சோயர்' மற்றும் 'ஹகல்பெரி ஃபின்' ஆகிய நூல்களினூடாக, அமெரிக்காவின் இயற்கை அழகு வர்ணிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் 'மிசிசிப்பி' நதியை மையமாகக் கொண்டு, அமெரிக்க எழுத்தாளரான மார்க் ட்வெய்ன் (Mark Twain) (1835-1910) என்பவர் எழுதிய இவ்விரு கதைகளும் பெரும் புகழ்பெற்றன.




ஹகல்பெரி ஃபின்

மார்க் ட்வெய்ன்

*** புதையல் தீவு:**

ஸ்கொட்லாந்து எழுத்தாளரான றொபர்ட் லூயி ஸ்டீவன்சன் (Robert Louis Stevensen) (1850-1894), கடற்கொள்ளையர்களை மையமாக வைத்து எழுதிய கதைதான் 'புதையல் தீவு' (Treasure Island). 'ஜிம் ஹோகிங்ஸ்' எனும் கதையின் நாயகன் தான் கண்டெடுத்த ஒரு புதையல் வரைபடத்தைக் கொண்டு, புதையலைத் தேடிச் செல்லும் வழியில் கடற் கொள்ளையர்களால் ஏற்படும் சவால்களை எதிர்கொள்ளும் விதம் பற்றியே இக்கதை சித்தரிக்கின்றது.



றொபர்ட் லூயி ஸ்டீவன்சன்





புதையல் தீவு



டொம் சோயர்

## சிறுவர் காவியங்கள்

சிறுவர் காவியங்கள் முதன்முதலில் வாய்வழியாகவே நடைமுறைக்கு வந்தன. பின்னர் பாட்டுடனான கதை (Ballads) மற்றும் பாட்டு (Songs) வடிவில் அவை வெளியாகின. ஒரு மெட்டின் அடிப்படையில் மனப்பாடம் செய்யப்பட்டு பரம்பரை பரம்பரையாக அவை வெளிவந்தன. சுவாரஸ்யமான, விநோதமான, நகைச்சுவையான பாங்குகளில் இந்த சிறுவர் காவியங்கள் வெளிவந்தன.



பிரசித்திபெற்ற சிறுவர் பாடல் 'பா பா ப்ளெக் ஷீப்'

*** சிறுவர் பாடல்கள்:**

சிறுவர் பாடல்கள் மற்றும் சிறுவர்களுக்கான பாடலுடன்கூடிய கதைகள் என்பன உலகளவில் பிரசித்திபெற்றவை. அவை நீண்டகாலமாக நிலைத்து வருபவை. அந்தவகையில், சுமார் 600 வருடங்கள் வரையான வரலாற்றைக்கொண்ட 'லிட்ல் போ பீப்' (Little Bo peep) எனும் சிறுவர் பாட் டுக்கதையானது, சிறுவர்கள் ஒளிந்து விளையாடுவதை கருப்பொருளாகக் கொண்டு இயற்றப்பட்டுள்ளது. அவ்வாறே, 'ரிங்க் எ ரிங்க் ஒ ரோஸஸ்' (Ring A Ring Oroses) எனும் சிறுவர் பாடலானது, தொற்றுநோய் அறிகுறிகள் பற்றிக் கூறுகின்றது.

*** அர்த்த மற்றபாட்டுக் கதைகள்:**

ஆங்கிலேய ஓவியரான எட்வர்ட் லியர் (Edward Lear) (1812-1888), சிறுவர்களுக்கான அர்த்தமற்ற பாட்டுக்கதைகளை (Nonsense Rhymes) எழுதுவதிலும் அவற்றுக்கு அபூர்வமான ஓவியங்களை வரைவதிலும் பிரசித்தி பெற்றார்.



எட்வர்ட் லியர்

## சிறுவர் கதைகளுக்கான விருதுகளும் பதக்கங்களும்

சிறுவர்களுக்கென்று வெளிவரும் படைப்பாற்றல் மிக்க-சுவாரஸ்யமான கதைகளின் அடிப்படையில் அவற்றின் சிறந்த படைப்புத் திறனுக்கமைய, சிறந்த கதைப்புத்தகம் தெரிவுசெய்யப் பட்டு அவற்றுக்குப் பரிசில்களும் விருதுகளும் பதக்கங்களும் வழங்கப்படுவதுண்டு. அவ்வாறான சில போட்டிகளில் நடுவர்களாக தம்பி,தங்கைகளே நியமிக்கப்படுகின்றனர்.

*** கானகீ பதக்கம்: (Carnegie Medal)**

1936 இல் இருந்து பிரித்தானிய நூலக சங்கம் இந்த பதக்கத்தை வழங்கி வருகின்றது. அமெரிக்க கோடீஸ்வரரான என்ட்ரூ கானகீ என்பவரின் ஞாபகார்த்தமாகவே, இந்த பதக்கத்திற்கு 'கானகீ பதக்கம்' என பெயரிடப்பட்டுள்ளது. இவர்தான் ஐக்கிய அமெரிக்காவிலும் பிரித்தானியாவிலும் நூலகங்களை நிர்மாணித்தார்.

*** நியூபெரி பதக்கம்: (Newbery Medal)**

வருடத்தின் சிறந்த சிறுவர் நூலுக்காக, வழங்கப்படும் இந்தப் பதக்கம் அமெரிக்க நூலக சங்கத்தினால் வழங்கப்படுகின்றது. ஜோன் நியூபெரி என்பவரின் ஞாபகார்த்தமாகவே, இந்தப் பதக்கம் வழங்கப்படுகின்றது. இவர் 1745 ஆம் ஆண்டு உலகில் முதலாவது சிறுவர் புத்தக விற்பனை நிலையமொன்றை நிறுவினார். (அ)



நியூபெரி பதக்கம்







காணகீ பதக்கம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுனாமி



சுனாமி என்ற சொல்லின் பிறப்பிடம் ஜப்பான் ஆகும். இதன் கருத்து 'ஆழிப்பேரலை' என்பதாகும். சமுத்திர அடித்தளத்தில் சடுதியில் ஏற்படுகின்ற அசைவுகளினால் உருவாகும் அழிவை ஏற்படுத்தும் அலை சுனாமி எனப்படுகின்றது. இத்தகைய சுனாமி அலைகளினால்






2004 டிசம்பர் 26 ஆம் திகதி இலங்கைக்குப் பாரிய அழிவுகள் ஏற்பட்டன. அதற்கமைய, இலங்கையில் முதலாவது சுனாமித் தாக்குதலை எதிர்கொண்ட பிரதேசம் தென்கிழக்குப் பகுதியாகும். இதன்மூலம் இலங்கைக்கு ஏற்பட்ட பாதிப்புக்களை நினைவுகூரும்முகமாக இலங்கை 4 முத்திரைகளை வெளியிட்டது. இதன் பின்னரும் உலகில் பல இடங்களில் சுனாமி ஏற்பட்டிருக்கின்றது. இதில் அண்மையில் ஜப்பானில் ஏற்பட்ட சுனாமி குறிப்பிடத்தக்கதாகும். சுனாமியினால் பாரிய உயிரிழப்புக்களும், கட்டடங்களுக்கு சேதங்களும் ஏற்பட்டு வருவது ஒரு கவலைக்குரிய விடயமாகவே காணப்படுகின்றது.

எல்.எப்.முனீரா,
க/தெநு பாத்திமா பாலிகா மு.வித்.,
கண்டி.

# நிகொலஸ் கொபர்னிகஸ்



பொலஞ்ஞா பல்கலைக்கழகத்தில் சட்டத்தையும், பாதுவா பல்கலைக்கழகத்தில் மருத்துவத்தையும் கற்ற நிகொலஸ் கொபர்னிகஸ் தமது ஓய்வு நேரத்தில் வானியல் ஆராய்ச்சியில் ஈடுபட்டார். அதன் விளைவாக, புவி கோளவடிவானதெனவும் கோள்கள் சூரியனைச் சுற்றி வருகின்றன

என்பதையும் கண்டறிந்து உலகிற்குக் கூறினார். இந்தக் கருத்து அக்காலத்தில் நிலவிய கருத்துக்களுக்கு முற்றிலும் மாறுபட்டதாகும். மத்தியகாலத்தில் நிலவிய உலகம் தட்டையானது என்ற தொலமியின் கருத்தையும், சூரியன் உட்பட அனைத்துக் கோள்களும் பூமியைச் சுற்றி வருகின்றன என்ற கருத்தினையும் கொபர்னிகஸ் நிராகரித்தார். அவரது இந்த கண்டுபிடிப்பு கோள்கள், நட்சத்திரங்கள் தொடர்பான விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களுக்கு வழிவகுத்தது. கொபர்னிகஸ் விஞ்ஞானத்திற்கு ஆற்றிய அரும்பணியால் 'வானியல் விஞ்ஞானத்தின் தந்தை' என்றும் இவர் அழைக்கப்படுகின்றார்.

எம்.பி.பாத்திமா சம்ஹா,
பொலன்னறுவை மு.ம.கல்., பொலன்னறுவை.

# அன்னை

இரத்த முத்துக்களை
மதுரம் போல் இருக்கும் பாலாகத் தந்தவளே!
காணாத கனவுகளை நனவாக்கியவளே
உன் அன்பை மீற
இந்த உலகத்தால் முடியாதம்மா!
குயிலுக்குத் தெரியும்
அதன் குரல்தான் இனிமை என்று
எனக்குத் தெரியும்
உன் அன்பு தான் உயர்வு என்று
பூவான என் நெஞ்சில்
பட்டாம் பூச்சியாய் குடியிருப்பாயம்மா
உலகமெனும் பூப்பந்து
சுழலும் வரை
என் கண்ணில் நீயும்
உன் நெஞ்சில் நானும்
குடியிருக்க ஆசையம்மா!

எம்.ஃபாத்திமா நஜாஸா,
கனுவெல மு.க.வி.,
மொனராகலை.



# தாது கோபுரங்களின் வடிவங்கள்



மணி வடிவம்
பானை வடிவம்
நீர்க்குமிழ் வடிவம்
தானியக் குவியல் வடிவம்
நெல்லிக்கனி வடிவம்
தாமரை வடிவம்

கா.அபிஷேக் கோபால்,
றோயல் கல்லூரி,
கொழும்பு-7

# ஒளி நுணுக்குக்காட்டி



ஒளி நுணுக்குக்காட்டியை முதன்முதலில் கண்டுபிடித்தவர் ஸக்கரியாஸ் ஜோன்ஸன் ஆவார்.

இதன் உச்ச உருப்பெருக்க வலு x2000 ஆகும். ஒளி நுணுக்குக்காட்டியினூடாகப் பார்க்க முடியாத வைரஸ் போன்ற நுண்ணங்கிகளைப் பார்ப்பதற்கு இலத்திரனியல் நுணுக்குக்காட்டி பயன்படுகிறது. இதன் உச்ச உருப்பெருக்க வலு x500,000 ஆகும்.

நுணுக்குக்காட்டியில் முதலில் தக்கைக் கலங்களை அவதானித்தவர் ரொபர்ட் ஹுக் ஆவார்.

இதில் காணப்படும் பொருள் வில்லைகள் 3 வகைப்படுகிறது.

* உயர்வலு உருப்பெருக்க வில்லை
* இடைவலு உருப்பெருக்க வில்லை
* தாழ்வலு உருப்பெருக்க வில்லை

எம்.டி.இஸ்ஸத் இஷாரா,
அல்-மனார் மத்.கல்., மருதமுனை.




# விண்வெளியில்....



* விண்வெளி ஆய்வின் ஆரம்ப நாள் - 04.10.1957
* விண்வெளிக்கு முதல் செய்மதியை அனுப்பிய நாடு - **சோவியத் ரஷ்யா**
* விண்வெளிக்கு சென்ற முதல் செய்மதி - **ஸ்புட்னிக் - 1**
* விண்வெளிக்கு சென்ற முதல் மிருகம் - **லைக்கா (நாய்)**



* விண்வெளிக்கு சென்று உயிருடன் மீண்ட முதல் மிருகம் - **ஈனோஸ் (குரங்கு)**
* விண்வெளிக்கு சென்ற முதல் மனிதன் - **யூரி ககாரின்**



* விண்வெளிக்குச் சென்ற முதல் பெண்மணி - **வெலன்டினா டெரெஸ்கோவா**
* விண்வெளியில் மிதந்த முதல் மனிதன் - **அலக்ஸி லியனோவ்**



* முதல் விண்வெளி நிலையம் - **சல்யூட் - 1**
* செவ்வாய் கோளில் தரையிறங்கிய முதல் வாகனம் - **வைகிங் - 1**



ஆர்.பிரசன்யா,
என்பீல்ட் த.ம.வித்., டிக்கோயா

# அவன் படி அளப்பான்

அந்த அழகிய கிராமத்தில் பக்கிரி என்ற ஒரு மகா சோம்பேறி இருந்தான். அவனது உடல் வலிமையாக இருந்தும் ஒரு வேலையும் செய்யாமல் பிச்சை எடுத்து வாழ்ந்து வந்தான். இவ்வாறு பிச்சை எடுத்து நீண்டகாலம் தனது ஊரில் அவனால் வாழ முடியவில்லை.

ஏனெனில், நாளுக்கு நாள் இவனுக்குப் பிச்சை போடுபவர்களின் எண்ணிக்கை குறைந்து வந்ததேயாகும். நாளடைவில் யாருமே பிச்சை போடாத நிலையும் ஏற்பட்டுவிட்டது. இதனால், அந்த பக்கிரி தனது கிராமத்தை விட்டு பக்கத்துக் கிராமத்திற்குச் சென்றுவிடத் தீர்மானித்தான். அவ்வாறு கிளம்பி அடர்ந்த காட்டின் வழியே சென்றுகொண்டிருந்தபோது, நடுக்காட்டில் கால்களை இழந்த நரி ஒன்று படுத்துக்கிடப்பதைக் கண்டான். அவன் தன் மனதில் இந்த நரி எங்கும் போக முடியாதே. இது எப்படி இரையைத் தேடுகிறது? என்று யோசித்தான். அப்பொழுது புலி உறுமும் சத்தம் கேட்டது. உடனே, பக்கிரி அருகிலுள்ள புதரின் பின்னால் பதுங்கிக்கொண்டான்.

அந்தப் புலி ஒரு மானைக் கொன்று இழுத்துக்கொண்டு வந்தது. அது அந்த மானின் உடலிலுள்ள மாமிசத்தை உண்டுவிட்டு அதன் மீதி உடலை அங்கேயே போட்டுவிட்டுச் சென்றுவிட்டது. புலி வெகுதூரம் சென்றதும் நரி உருண்டு வந்து புலி சாப்பிட்டு விட்டுப் போன மானின் மிகுதி மாமிசத்தை உண்டது. அதைக் கண்ட பக்கிரி 'காலில்லாது நகர முடியாத இந்த நரிக்கு ஆண்டவன் எப்படியோ உணவைக் கொடுக்கிறான். அதுபோல நானும் வேலை செய்யாமல் இருந்தாலும் ஆண்டவன் எனக்கும் உணவளிப்பான்,' என எண்ணி அங்கிருந்து கிளம்பிச் சென்று புதிய கிராமத்தை அடைந்தான். அங்கு அவன் கோயில் முன்னால் நின்று பிச்சை கேட்கலானான்.



அப்பொழுது ஒருவர் பக்கிரியிடம் "இது கோயில். ஆண்டவனை வணங்கும் இடம். நீ வீடுகளுக்குப் போய் பிச்சை கேள்" என்றார். அதற்குப் பக்கிரி "இது ஆண்டவனை வணங்கும் இடம் என்றால் ஆண்டவன் எனக்கு எப்படியாவது [illegible] நான் கண்டேன். அது போன்று எனக்கும் ஆண்டவன் உணவளிப்பான்" என்றான். அதற்கு அந்த மனிதர் "உடலில் வலு உள்ள நீ ஒரு வேலையும் செய்யாமல் இருந்தால் உனக்கு உணவு எப்படிக் கிடைக்கும்? காட்டில் கிடந்த நரிக்கு எழுந்து செல்லக் கால்கள் இல்லை. அதனால், கடவுள் எப்படியோ அதற்கு உணவளித்திருப்பான். அதற்கு கால்கள் இல்லாததால் தான் அது ஓர் இடத்தில் படுத்துக் கிடக்கின்றது. ஆனால், நீயோ அனைத்தும் இருந்தும் அந்த நரி போல் படுத்துக்கிடக்கப் போகிறாயா? உனக்கு உறுதியான கை, கால், உடலும் உள்ளனவே. அதனால், நாணயமாக உழைத்துச் சாப்பிடு" என்றார். அப்பொழுதுதான் பக்கிரிக்கு தன் தவறு புரிந்தது. அன்று முதல் அவன் சோம்பலாக இருப்பதை விட்டு உழைத்துச் சம்பாதிக்கலானான்.

எஃப்.சஹானா,
அல்-அஸ்ஹர் மத். கல்.,
திஹாரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஆறு வித்தியாசங்களில் x அடையாளமிடுக



2

சரியான எண்ணிக்கையில் வட்டமிடுக

3




## அறிவுக்கு விருந்து 337 விடைகள்

போட்டி: 01



போட்டி: 02




போட்டி: 03



போட்டி: 04

1. கற்பனை
2. செழிப்பு
3. பரீட்சார்த்தி
4. பொற்காலம்
5. வளையல்

போட்டி: 05

1. அழுதது
2. இறந்தகாலம்
3. வள்ளல்
4. அலறும்




தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2011.11.30 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.


**அற்லஸ் அறிவுக்கு விருந்து 340**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**

### இணைக்க 4

| சொற்கள் | கூட்டப்பெயர் |
|---|---|
| 1. ஆடு | 1. குலை |
| 2. பழம் | 2. குவியல் |
| 3. மக்கள் | 3. கூட்டம் |
| 4. நெல் | 4. மந்தை |

அருகிலுள்ள சொற்களை உரிய கட்டங்களுக்குள் எழுதி, குறுக்கெழுத்துப் போட்டியை பூர்த்திசெய்க

1




### பிழை திருத்தி எழுதுக 5

1. வின்ஞானம் - ..............................
2. தொழிநுற்பம் - ..............................
3. வெட்ப்பம் - ..............................
4. பூன்சோலை - ..............................

### அற்லஸ் அறிவுக்கு விருந்து - 337 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
ஸஹ்றி மொஹமட்,
5 ஆம் குறுக்குத் தெரு, புத்தளம்.

**போட்டி: 02**
எஸ்.ஏ.மேத்தா,
தாமரைக்கேணி வீதி, மட்டக்களப்பு.

**போட்டி: 03**
எஃப்.ரஹ்னா, முதற்பள்ளித் தெரு, கொழும்பு-12.

**போட்டி: 04**
கி.கனிஷாறிதன், பள்ளங்கோட்டை, நானாட்டான்.

**போட்டி: 05**
எஃப்.சுஜைதா, மீராநகர் வீதி, நிந்தவூர்-11.

**பாராட்டுப் பெறுவோர்:**

★ எம்.மர்ஷாத், வெல்லம்பிட்டி.
★ சு.திவாஸ்கர், கொழும்பு-15.
★ எம்.பஸீன், ஏறாவூர்.
★ எஃப்.ஷப்னா, பூவெலிகட.
★ டி.ரிஷா, கவுடுபெலல்ல.
★ எம்.வஸீம், அநுராதபுரம்.
★ எச்.பாஹிம், அவிசாவளை.
★ ரிமாஸ் முஸம்மில், கஹவத்தை.
★ எஃப்.ஹஸீபா, ஹெம்மாதகம.
★ சி.சொரூபன், திருகோணமலை.

## விஜய் வாசகர் மடல்



நான் உன்னை நான்கு வருடங்களாக வாசித்து வருகின்றேன். உன்னில் வரும் கண்டுபிடிப்புக்கள், கண்டுபிடிப்பாளர்கள் பற்றிய விறுவிறுப்பான தகவல்களை வாசிக்கும்போது, என் மனதிலும் இவ்வாறு வரலாமா? எனும் கேள்வி எழுந்தது. இதன் பிரதிபலனாக, சம்மாந்துறை வலய பாடசாலைகளுக்கிடையிலான புத்தாக்கப் போட்டியில் கலந்துகொண்டு மெழுகுவர்த்தியை மீள் சுழற்சிக்குட்படுத்தும் இயந்திரத்தினைக் கண்டுபிடித்து, அறிமுகப்படுத்தி வலயத்தில் மூன்றாவது இடத்தைப் பெற்றுக்கொண்டேன். இதற்குக் காரணமாக இருந்த உனக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**- எஸ்.வினோஜ்குமார், ஸ்ரீ கோரக்கர் த.ம.வித்தியாலயம், சம்மாந்துறை.**

'முடியவில்லை' என்னும் முட்களுக்குள் சிக்கியிருந்த முன்னைய பொழுதுகளை மூடிவிட்டு




'முடியும்' என்ற முழு முயற்சியுடன் முன்னேறுவதற்கு மாணவர்களுக்கு வழிகாட்டும் விஜய்யே! நீ தொடர்ந்தும் வெற்றிநடை போட வாழ்த்துகின்றேன்.

**-அஸ்மா றபீக், படுபிடிய, கண்டி.**

'மனித வளர்ச்சிக்கு அடிப்படையான கண்டுபிடிப்புக்கள்', 'சேர் ஐசக் நியூட்டன்', 'உலகில் சமுத்திரங்கள் பல வற்றிவிடும் அபாயம்', 'இராமாயணம்', 'ஆந்தையின் பெருமை' என்பனவற்றை விரும்பி வாசித்தேன். 'அசுத்தமாக இருந்தால் நோய்கள் தேடி வரும்,' 'அணுகுண்டின் கதை' என்பன பயன்மிக்கவை.

**- க.மதூஷிகா, தெல்தோட்டை வீதி, கலஹா.**

'நீரில் நடக்கும் ரோபோ', 'விண்வெளித் தகவல்கள்', 'அணுகுண்டின் கதை', 'சேர் ஐசக் நியூட்டனின் வரலாறு', 'ஆந்தையின் பெருமை, 'சிறுகதைகள்', 'விளையாட்டுத் தகவல்கள்' போன்றன மிகச் சிறப்பாக இருந்தன. இனிவரும் விஜய் இதழ்களிலும் நல்ல தகவல்கள் வருமென நம்புகிறேன். உனக்கு எனது பாராட்டுக்கள்!

**- மா.கதிர்முகிலன், நெளுக்குளம் த.ம.வித்., வவுனியா.**

நீ சுமந்து வந்த சேர் ஐசக் நியூட்டன், 'அணுகுண்டின் கதை' என்பன மிகவும் பயனுள்ளதாக இருந்தன. உன்னில் அடங்கியிருக்கும் அனைத்தும் மிகவும் பயனுடையவை.

**- ஏ.என். அல் இமான், ஓட்டமாவடி தே.பாட., ஓட்டமாவடி.**

'சேர் ஐசக் நியூட்டனின் வரலாறு', 'முரளியின் சிறப்புரை', 'அணுகுண்டின் கதை' மற்றும் 'மனித வளர்ச்சிக்கு அடிப்படையான கண்டுபிடிப்புகள்' என்பன என்னையும் எனது அண்ணனையும் மிகவும் கவர்ந்தன. 'Hard disk இன் கொள்ளளவை அதிகரிக்கச் செய்யும் உப்புத்தூள்', 'கிழக்கு வானில் வியாழன் கிரகம்' என்பன பிரமாதம். அத்துடன், தொடர்ந்து வெளிவரும் 'கல்வி முகாமைத்துவம்' பகுதி சுப்பர்.

**-எம்.வலீத், அல்-ஸபா வித்., நிந்தவூர்.**

*பயன்தருவதை அரியத்தருகின்றாய். அரியத் தருவதை எமக்குப் பயன்பெறச்*



*செய்கின்றாய்'. குறிப்பாக, 'Royal Clock', 'அன்னை தெரேசா பெற்ற விருதுகள்' மற்றும் 'Hard disk இன் கொள்ளளவை அதிகரிக்கச் செய்யும் உப்புத்தூள்' போன்ற ஆக்கங்கள் என் மனதைக் கவர்ந்தவை. மேலும், 'குறுந்தகவல்கள்', 'தெரிந்துகொள்வோம்' பகுதிகளும் மிகச் சுவாரஸ்யமாக இருந்தன.*

**-ஷிம்லா ஷாகிர், ஹிஜ்ரா கார்டன், கெசல்வத்த, பாணந்துறை.**

இந்த இதழில் (23.11.2011) வெளியாகியிருக்கும் ஆக்கங்கள் குறித்து உங்கள் விமர்சனங்களை தபாலட்டையில் மாத்திரம் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.

அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 30.11.2011.

**அனுப்ப வேண்டிய முகவரி:**



வாசகர் மடல்,
'விஜய்'
த.பெ.எண் 2037,
கொழும்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கற்பிட்டியைச் சேர்ந்த முபாரக்-நிஷானா தம்பதியரின் செல்வப் புதல்வன் முஹமட் முஷ்தாக், 23.11.2011 ஆகிய இன்று தனது மூன்றாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார். இவரை, குடும்பத்தினர்கள் மற்றும் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருள்பெற்று, சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர். (தகவல்: பர்ஹான்)

விஜய் 'விழா உலா' த.பெ.எண் 2037 கொழும்பு

வெலிகமையைச் சேர்ந்த ரதான்-ரியாஸா தம்பதியரின் செல்வப் புதல்வன் அப்துல்லாஹ், 12.11.2011 அன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, பெற்றோர் மற்றும் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர். (தகவல்: அதாமா ஸைனப்)






வத்தேகெதரையைச் சேர்ந்த ஹுசைன்-செயிளுன் தம்பதியரின் செல்வப் புதல்வன் அக்ரம், 13.11.2011 அன்று தனது பதினொராவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரை, குடும்பத்தினர்கள் மற்றும் உறவினர்கள் அனைவரும் இறைவனின் அருள்பெற்று, நலமுடன் வாழ வாழ்த்துகின்றனர். (தகவல்: சமிர்)

# மூல வர்ணங்கள்

ஓவியம் வரைவோம் - 77

'மூல வர்ணங்கள்' என்றால், வேறு எந்தவிதமான வர்ணங்களின் கலப்பின்றி உண்டான தனி வர்ணங்களாகும். சிவப்பு,





மஞ்சள், நீலம் ஆகிய மூன்று நிறங்களும் மூவர்ணங்களாகக் கொள்ளப்படுகின்றன. இவற்றின் நிறம் (வர்ணம்) எந்தவொரு வர்ணக் கலப்பும் இல்லாமல் இயல்பாகவே அமைந்துள்ளது. இதுவே மூல வர்ணங்களின் பிரதான பண்பாகும்.

## இரண்டாம் வர்ணங்கள்

மூல வர்ணங்கள் ஒன்றுடன் ஒன்று சம அளவில் கலக்கும்போது, உண்டாகும் வர்ணங்கள் 'இரண்டாம் வர்ணங்கள்' அல்லது 'துணை வர்ணங்கள்' என அழைக்கப்படுகின்றன. ஊதா, செம்மஞ்சள், பச்சை என்பன இரண்டாம் வர்ணங்களாகக் கொள்ளப்படுகின்றன.

- சிவப்பு+நீலம்= ஊதா
- சிவப்பு+ மஞ்சள்= செம்மஞ்சள்
- நீலம்+ மஞ்சள்= பச்சை





## மூன்றாம் வர்ணங்கள்

மூல வர்ணங்களும் இரண்டாம் வர்ணங்களும் ஒன்றுடனொன்று கலப்பதால் 'மூன்றாம் வர்ணங்கள்' உருவாகின்றன.

(தொடரும்)



ஜோ.எடிஷன், திருவையாறு ம.வித்., சாந்தபுரம்.



எஸ்.பர்ஹான், அலிகொல் த.ம.வித்., உடப்புஸல்லாவ



எம்.அப்ஸர், அல்-மக்கியா மு.ம.வித்., இரத்தினபுரி.



எம்.அஜ்மலன், தில்லையடி மு.ம.வித்., புத்தளம்.



எம்.ரியாத், அல்-அஸ்ஹர் மத்.கல., திஹாரிய.



பிரேமரா சுதர்ஷனி, பறகஹதெனிய தே.பா..., பறகஹதெனிய.




வ.சஜீவன்,




அனுப்ப வேண்டிய முகவரி: கைவண்ணங்கள் த.பெ.எண் 2037 கொழும்பு




இக்ரிமா பாஸி, அக்குறணை மு.ம.வித்., அக்குறணை.



எஃப்.சபீலா, ருவன்வெல்லை மு.வித்., ருவன்வெல்லை.



எஃப்.ஆசியா, பதுர்தீன் ம.வித்., கண்டி



எஸ்.தனுஷ்வரன், தும்மலதெனிய மு.வித்., வரக்காப்பொலை.




பாஸீஹா தாஹா, முஸ்லிம் ம.அ.கல., கல்-எளிய.



ரஹ்மதுன் காமிலா, கெகுனகொல்ல தே.பாட., கெகுனகொல்ல.



ஃபாரா புவாட், அல்-ஷபா ம.வித்., கண்டி.



ஸனீஹா ஷரீப், மதீனா தேசிய பாட., சியம்பலாகஸ்கொடுவ.



ரோஷன் அக்தர், தஸ்ரியா மத்.கல., சிலாபம்.

## 'விழா உலா' குறித்து உங்கள் கவனத்துக்கு...!

'விழா உலா' பகுதியில் பிறந்தநாள் வாழ்த்துக்கள் உட்பட ஏனைய சாதனையாளர்கள், விழாக்கள் பற்றிய தகவல்கள் கட்டணமின்றியே பிரசுரிக்கப்படுகின்றன.

பிறந்தநாள் வாழ்த்துக்களை அனுப்பும்போது அதுகுறித்த, படம் மற்றும் தகவலை பிறந்தநாள் கொண்டாடப்படவுள்ள தினத்திற்கு இரண்டு வாரங்களுக்கு முன்பதாக எமக்குக் கிடைக்கக்கூடியவாறும் சாதனையாளர்களின் படம் மற்றும் அதுகுறித்த தகவலை அனுப்பும்போது கட்டாயமாக குறித்த சாதனைகளுக்காக வழங்கப்பட்ட சான்றிதழின் நிழற் பிரதியையும் இணைத்து எமக்கு அனுப்பி வையுங்கள்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



# உறவுப்பாலம்

இரண்டு சகோதரர்கள் அருகருகே தோட்டம் அமைத்து பயிர்செய்து வாழ்ந்து வந்தார்கள். தோட்டத்துக்கு இடையே ஒரு சிறிய நதி ஓடிக்கொண்டிருந்தது. நகருக்குச் செல்ல வேண்டும் என்றால், அந்த நதியைக்கடந்துதான் செல்ல வேண்டும்.

பல காலம் அன்பாக வாழ்ந்த சகோதரர்களுக்கு இடையே திடீரெனப் பிணக்கு ஏற்பட்டுவிட்டது. இதனால் தம்பி அண்ணனை ரொம்பவே திட்டிவிட்டான்.

கோபம் கொண்ட அண்ணன் ஒரு பணியாளரை அழைத்து தனது எல்லையில் மதில் சுவரைக் கட்டுமாறு கூறிவிட்டு வேலை காரணமாக, அயல் கிராமம் ஒன்றுக்குச் சென்றுவிட்டார்.

சில நாட்களுக்குப் பின் அவர் திரும்பி வந்து பார்த்தபோது, தனது தோட்டத்திலிருந்து தம்பியின் தோட்டத்துக்கு நதியின்மீது ஒரு பாலம் கட்டப்பட்டிருந்தது. மதிலுக்குப் பதிலாக பாலத்தைக் கட்டிவிட்டார் பணியாளர்.

அண்ணன் அமைதியாகப் பாலத்தின் மேல் நடந்தார்.

அப்போது அவரது மனதில் பல்வேறு சிந்தனைகள் அலைமோதின.

'மதில் சுவர் கட்டியிருந்தால் தம்பிக்குப் பெரிய பாதிப்பு வந்திருக்கும். அவனது போக்குவரத்து முற்றிலும் பாதிக்கப்பட்டு, நகருக்கு செல்ல வேண்டும் என்றால் பல மைல் தூரம் சுற்றிச் செல்லவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கும்.இதனால், எமக்கிடையே உள்ள மோதல் பெரிதாகி இருக்கும். நல்ல வேளையாக, அந்த நிலை வராமல், பணியாளர் புத்திசாலித்தனமாக செயற்பட்டு பாலத்தைக் கட்டியுள்ளார்.

தூரத்தில் பாலத்தையே பார்த்துக்கொண்டிருந்த தம்பி ஓடோடிச்சென்று அண்ணனைக் கட்டியணைத்தான்.

"நான் எவ்வளவு திட்டியும் நீ அன்பாக இந்தப் பாலத்தைக் கட்டினாயே. நீ என் மேல் எவ்வளவு பிரியம் வைத்திருக்கிறாய்அண்ணா.." என கண் கலங்கினான்.

அண்ணன் நெகிழ்ந்தார், தம்பியை இறுக அணைத்துக் கொண்டார்.

மதிலுக்குப் பதிலாக பாலம் கட்டிய பணியாளருக்கு அண்ணன் மானசீகமாக நன்றி கூறினார்.



# சுயமரியாதை

மரத்தடியில் முறுக்குச் சுட்டு விற்கும் பாட்டியிடம் முறுக்கு வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர் அந்தத் தெருவில் உள்ள சிறுவர்கள். பானு மட்டும் பணம் இல்லாததால் அவர்களையே பார்த்தபடி நின்றிருந்தாள்.

இதைக் கவனித்த பானுவின் அம்மா பூங்கொடி, தன்னிடம் இருந்த பத்து ரூபாவை அவளிடம் கொடுத்து, "போய் முறுக்கு வாங்கிச் சாப்பிடும்மா" என்று கூறிவிட்டுக் குடிசைக்குள் போனார்.

ஆனால், பானு தன் அம்மா கொடுத்த பத்து ரூபாய்க்கு முறுக்கு வாங்காமல், பென்சில் ஒன்றை வாங்கி வந்தாள். அதைக்கண்ட பூங்கொடி, "இந்தப் பென்சில் உனக்கு எப்படிக் கிடைத்தது?" என்று கேட்டார்.

"நீங்கள் முறுக்கு வாங்கக் கொடுத்த பத்து ரூபாயில் வாங்கினேன் அம்மா" என்றாள் பானு.

"பென்சில் கேட்டால் நான் வாங்கித் தரமாட்டேனா என்ன? எல்லாப் பிள்ளைகளும் சாப்பிடுவதை வேடிக்கை பாக்கக்கூடாது என்பதற்காகத்தானே பணம் கொடுத்தேன்?" என்று கூறினார் அம்மா.

"இல்லை அம்மா நேற்று பக்கத்து வீட்டு பவித்ராவிடம் பென்சில் கேட்டேன். தர முடியாது என்று சொல்லி விட்டாள். எனக்கு அவமானமாக இருந்தது. எப்போது வேண்டும் என்றாலும் முறுக்கு வாங்கிச் சாப்பிடலாம் அம்மா, ஆனால், இப்போது எனக்கு அவசரமாகத் தேவைப்படுகிறது பென்சில்தான். நாங்கள் ஏழையாக இருந்தாலும். சுயமரியாதைதான் முக்கியம். அதுதான் இனிமே சின்னச் சின்ன பொருட்களை பிறரிடம் கேட்பதைத் தவிர்க்கத்தான் பென்சில் வாங்கினேன்" என்றாள் பானு.

தன் மகளின் பக்குவப்பட்ட பேச்சைக் கேட்டு மகிழ்ச்சியில் திளைத்தார் பூங்கொடி.

ஏழாம் வகுப்பில் படிக்கும் சீலன் பாடசாலைக்குச் செல்வதற்காகப் புறப்பட்டுக் கொண்டிருந்தான். அவன் வீட்டின் அருகே வேலாயுதம் என்ற ஒரு விவசாயியின் வீடு உள்ளது. அவர் வீட்டின் அருகே சென்றதும், அங்கு நிற்கும் வேப்ப மரத்தை வெட்டுவதற்காக இருவர் கோடரியுடன் தயாராக நிற்பதைப் பார்த்து சீலன் அதிர்ச்சி அடைந்தான்.

உடனே வேலாயுதத்தின் வீட்டிற்குச் சென்று அவரிடம், "மரத்தை வெட்டப் போகிறீர்களா?" என்று கேட்டான்.

"ஆமாம், தம்பி. முத்தப்பனிடம் பத்தாயிரம் ரூபாய் கடன் வாங்கினேன். அதைக் குறிப்பிட்ட காலத்தில் திருப்பிக்கொடுக்க முடியவில்லை. அதனால், அவரது விருப்பப்படி, மரத்தை



# உயர்ந்த உள்ளம்

அவருக்கே விற்றுவிட்டேன்" என்றார் வேலாயுதம்.

"ஐயா, நம் ஊரில், இதுபோல் நிழல் தரும் மரம் வேறு எங்கும் இல்லை. இதுதான் பறவைகளின் புகலிடமாகவும், சுவாசிக்க சுத்தமான காற்றையும் தருகிறது. பெரியவர்கள் மன அமைதியுடன் ஓய்வுகொள்ளவும் என் போன்றோர் ஓடி விளையாடி மகிழவும் இந்த மரம் பயன்படுகிறது. அவ்வளவு ஏன், என் பெரியப்பாவிற்கு அடைக்கலம் கொடுத்ததுகூட இந்த மரம்தான்" என்று பீடிகை போட்டான் சீலன்.

"நீ என்ன சொல்கின்றாய்?" என்று கேட்டார் வேலாயுதம்.

"என் தந்தை வேலைக்காக வெளிநாட்டிற்கு செல்ல முயற்சி செய்துகொண்டிருந்தார். அதற்காக பெரியப்பாவிடம் எனது அம்மா ஓர் உதவி கேட்டுச் சென்றார். அப்போது எந்த உதவியும் அவர் செய்யவில்லை. ஒருநாள் அவருக்கே பணம் தேவைப்பட, அம்மாவிடம் சென்று கேட்டார். அப்போது, அம்மா அவரைத் திட்டி அனுப்பிவிட்டார். உடனே சோர்ந்துபோய் இந்த மரத்தின்கீழ் தான் படுத்துக் கிடந்தார். நான் பாடசாலை விட்டு வரும்போது, அவரைப் பார்த்து நடந்த சம்பவத்தைப் பற்றி விசாரித்தேன். உடனே நான் சேமித்த பணத்தில் இருந்து ஐந்நூறு ரூபாய் எடுத்து அவரிடம் கொடுத்து அனுப்பினேன்" என்று விபரம் சொன்னான், முருகன்.

"என் தந்தை வெளிநாடு செல்லும் முன்பு, என்னிடம் மகனே, குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை, என்று பெரியவங்க சொல்லியிருக்காங்க. குற்றமும், குணமும் சேர்ந்து இருப்பது தான் மனித மனம். குற்றத்தை மட்டும் பார்த்துக்கொண்டு குணத்தைக் கவனிக்காமல் விட்டுவிடக்கூடாது. எத்தகைய துன்பமாக இருந்தாலும் சரி, கடுமையான அறிவார்ந்த உழைப்பால் மட்டுமே வெற்றிகொள்ள வேண்டும். மாறாக, பொறுமை இழந்தோ, நேர்மை தவறியோ நல்ல பண்புகளை ஒவ்வொன்றாக இழந்துவிடக்கூடாது. அப்படிச் செய்தால் நம் மனம் குப்பைத் தொட்டியாகிவிடும்" என்று கூறியுள்ளார்.

"தம்பி, உன் உள்ளத்தில் நல்ல கருத்துக்களை விதைத்துள்ளார் உன் தந்தை. பண்பட்ட மனம் அவற்றை ஏற்றுக்கொண்டது. அதனால்தான் இந்தச் சிறுவயதில் உன்னிடம் உயர்ந்த எண்ணங்கள் இருக்கின்றன. நான் என் மகனை வெளிநாட்டு வேலைக்கு அனுப்ப வாங்கிய கடன்தான் இந்தப் பத்தாயிரம் ரூபாய். வெளிநாடு சென்றதும் முதல் மூன்று மாதங்களுக்கு பணம் அனுப்பினான். கடிதமும் எழுதினான். இப்போது அவனது மனைவியின் பேச்சைக் கேட்டுக்கொண்டு, எங்களுக்குப் பணம் அனுப்புவதில்லை. உன்னைப் பெற்றவர் தந்தைக்குரிய கடமையைச் செம்மையாகச் செய்கிறார். எனக்குப் பிறந்தவனோ, மகனுக்குரிய கடமையைச் செய்ய மறந்துவிட்டான். அதனால்தான் இந்த மரத்தை விற்க வேண்டிய நிலைமை எனக்கு வந்துவிட்டது" என்று தன் சோகக்கதையை சொல்லி முடித்தார் வேலாயுதம்.

"அப்படியானால், இந்த மரத்தை வெட்டாமல் இருக்க உங்களுக்கு பத்தாயிரம் ரூபாய்தானே வேண்டும்?அதில் சிறிதை இப்போதே நான் எனது சேமிப்புப் பணத்தில் இருந்து தருகிறேன். மிகுதியை எனது அப்பாவிடம் கேட்டு வாங்கித் தருகிறேன்" என்றான் சீலன். உடனே, வேலாயுதம் அவன் கைகளைப் பற்றி கண்களில் ஒற்றி," நீ வயதில் மட்டும்தான் சிறியவன். ஆனால், உள்ளத்தால் உயர்ந்தவன்" என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ආයුබෝවන்
## ஆயுபோவன்
## வணக்கம்

இன்றைய பாடத்தில் சுனிலுக்கும் கமலுக்கும் இடையில் நடைபெறும் ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

**සුනිල්: කමල් හෙට නිවාඩු නේද? අපි මොකද කරන්නේ?**
கமல் ஹெட்ட நிவாடு நேத? அபி மொகத கறன்னே?
சுனில்: கமல் நாளைக்கு விடுமுறைதானே? நாங்கள் என்ன செய்யலாம்?

**කමල්: අපි හෙට ක්‍රිකට් ගහමු.**
அபி ஹெட்ட கிரிக்கெட் கஹமு.
கமல்: நாங்கள் நாளை கிரிக்கெட் விளையாடுவோம்.

**සුනිල්: අපි කොහේද ක්‍රිකට් සෙල්ලම් කරන්නේ?**
அபி கொஹேத கிரிக்கெட் செல்லம் கறன்னே?
சுனில்: நாங்கள் எங்கே கிரிக்கெட் விளையாடுவோம்?

**කමල්: අපේ ගේ ඉස්සරහ පිට්ටනියේ සෙල්ලම් කරමු.**
அபே கே இஸ்ஸரஹ பிட்டனியே செல்லம் கறமு.
கமல்: எங்கள் வீட்டிற்கு முன்னால் இருக்கின்ற மைதானத்தில் விளையாடுவோம்.

**සුනිල්: එතකොට අපේ අනිත් යහළුවන්ට කියන්න ඕනේනේ?**
எதகொட அபே அனித் யஹலுவன்ட கியன்ன ஓனேனே?
சுனில்: அப்படியானால் எங்கள் மற்றைய நண்பர்களுக்கும் சொல்ல வேண்டும்தானே?

**කමල්: ඔව්. මම රාජාටයි වසන්තටයි අනිල්ටයි කියන්නම්. ඔයා අනිත් අයට කියන්න.**
ஒவ். மம ராஜாடய் வசந்தடய் அனில்டய் கியன்னம்.
ஒயா அனித் அயட்ட கியன்ன.
கமல்: ஆம். நான் ராஜாவுக்கும் வசந்தவுக்கும் அனிலுக்கும் சொல்கிறேன். நீங்கள் ஏனையவர்களுக்குச் சொல்லுங்கள்.

**සුනිල්: ඒත් සමන් ඉන්නේ දුරනේ. එයාට කොහොමද කියන්නේ?**
ஏத் சமன் இன்னே துரனே. எயாட்ட கொஹொமத கியன்னே?
சுனில்: ஆனால், சமன் தொலைவில் இருக்கிறாரே. அவருக்கு என்னவென்று சொல்வது?

**කමල්: සමන්ගේ ගෙදර ටෙලිෆෝන් තියෙනවනේ. මම රෑට කියන්නම්.**
சமன்கே கெதற டெலிபோன் தியெனவனே. மம ரேட்ட கியன்னம்.
கமல்: சமன் வீட்டில் டெலிபோன் இருக்கிறதல்லவா. நான் இரவில் சொல்கின்றேன்.

**සුනිල්: හොඳයි. හෙට උදේ කීයටද එන්න ඕනේ?**
ஹொந்தய். ஹெட்ட உதே கீயடத என்ன ஓனே?
சுனில்: நல்லது. நாளை காலை எத்தனை மணிக்கு வர வேண்டும்?

**කමල්: උදේ අටට විතර එන්න.**
உதே அடட விதற என்ன.
சுனில்: காலை எட்டு மணி அளவில் வாருங்கள்.

**සුනිල්: හොඳයි කමල්. එහෙනම් අපි හෙට උදේ හමුවෙමු.**
ஹொந்தய் கமல். எஹெனம் அபி ஹெட்ட உதே ஹமுவெமு.
சுனில்: நல்லது கமல். அப்படியானால் நாம் நாளை காலை சந்திப்போம்.

**කමල්: හොඳයි සුනිල්.**
ஹொந்தய் சுனில்.
கமல்: நல்லது சுனில்.

### பயிற்சி

**பின்வரும் வாக்கியங்களைச் சிங்களத்தில் மொழிபெயர்க்க**

i. நாங்கள் நாளை கிரிக்கெட் விளையாடுவோம்.
..............................................................

ii. மைதானத்தில் விளையாடுவோம்.
..............................................................

iii. காலை எத்தனை மணிக்கு வர வேண்டும்?
..............................................................






'Because' எனும் இணைக்கும் சொல்லைக் (Joining Word) கையாண்டு ஒன்றிணைக்கப்படுகின்ற கலப்பு வாக்கியங்களை (Complex Sentence) மேலும் இங்கே பயில்வோம். இவை, 'காரணங்களைத் (Reasons) தெரிவிக்கும் கலப்பு வாக்கியங்கள்' எனப்படுகின்றன.

(அ) என்னால் லலிதாவை நேற்று சந்திக்க முடியவில்லை.
I couldn't meet Lalitha yesterday.
(தனி வாக்கியம் -Simple Sentence)

(ஆ) லலிதா நேற்று அலுவலகத்துக்கு வரவில்லை.
Lalitha didn't come to office yesterday.
(தனி வாக்கியம் -Simple Sentence)

(இ) லலிதா நேற்று அலுவலகத்துக்கு வராததால், என்னால் அவளை சந்திக்க முடியவில்லை.
I couldn't meet Lalitha yesterday because she didn't come to office.
(கூட்டு வாக்கியம் -Complex Sentence)

---

(அ) நீ திங்கட்கிழமை அன்று விடுமுறை ஒன்றைப் பெறுவாய்.
You will have a holiday on Monday.
(தனி வாக்கியம் -Simple Sentence)

(ஆ) அன்று குடியரசு தினம் ஆகும்.
It is Republican day.
(தனி வாக்கியம் -Simple Sentence)

(இ) திங்கட்கிழமை அன்று குடியரசு தினம் என்பதால், நீ அன்று விடுமுறை ஒன்றைப் பெறுவாய்.
You will have a holiday on Monday because it is Republican day.
(கலப்பு வாக்கியம் -Complex Sentence)

---

(அ) நாங்கள் நேற்று பாடசாலைக்குத் தாமதமாகினோம்.
We were late to school yesterday.
(தனி வாக்கியம் -Simple Sentence)

(ஆ) அந்தப் பேருந்து திடீரெனப் பழுதடைந்தது.
The bus broke down suddenly.
(தனி வாக்கியம் -Simple Sentence)

(இ) பேருந்து திடீரெனப் பழுதடைந்ததால், நாங்கள் நேற்று பாடசாலைக்குத் தாமதமாகினோம்.
We were late to school yesterday because the bus broke down suddenly.
(கூட்டு வாக்கியம் -Compound Sentence)

---

(அ) அவர்கள் குடைகளை எடுத்துச் சென்றனர்.
They took the umbrellas.
(தனி வாக்கியம் -Simple Sentence)

(ஆ) மழை பெய்துகொண்டு இருந்தது.
It was raining.
(தனி வாக்கியம் -Simple Sentence)

(இ) மழை பெய்துகொண்டு இருந்ததால், அவர்கள் குடைகளை எடுத்துச் சென்றனர்.
They took the umbrellas because it was raining.
(கூட்டு வாக்கியம் -Complex Sentence)

---

(அ நிஸார் பரீட்சையில் சித்தியடைந்தான்.
Nizar passed the examination.
(தனி வாக்கியம் -Simple Sentence)

(ஆ) அவன் கடுமையாகப் படித்தான்.
He studied hard.
(தனி வாக்கியம் -Simple Sentence)

(இ நிஸார் கடுமையாகப் படித்ததால், அவன் பரீட்சையில் சித்தியடைந்தான்.
Nizar passed the examination because he studied hard.
(கூட்டு வாக்கியம் -Complex Sentence)

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிந்து கொள்வோம்



* ஐக்கிய அமெரிக்காவில் அடிமைத்தனத்தை ஒழித்தவர் ஜனாதிபதி ஆப்ரகாம் லிங்கன் ஆவார். அவர் பிறந்தது 1809.02.12 ஆம் திகதியாகும். இதே தினத்தில் உலகப் புகழ்பெற்ற விஞ்ஞானி ஒருவரும் பிறந்துள்ளார், அவரின் பெயர் என்ன?
  பரிணாமக் கொள்கையை உலகிற்கு அறிமுகப்படுத்திய சாள்ஸ் டார்வின்



* இலங்கையில் 1980 ஆம் ஆண்டு தொடக்கம் பாடசாலை மாணவர்களுக்கு இலவசப் பாடப்புத்தகம் வழங்கப்படுகின்றது. அவ்வாறே, இலவச சீருடை எப்போது தொடக்கம் வழங்கப்பட்டு வருகின்றது?
  1993 ஆம் ஆண்டு தொடக்கம்




* 21 வயதிற்கு குறைந்தவர்கள் சிகரெட், மதுபானம் போன்ற பொருட்களை விற்பதும் பாவிப்பதும் குற்றமாகும். இச்சட்டம் இலங்கையில் எப்போது கொண்டுவரப்பட்டது?
  2006 ஆம் ஆண்டில்
  (புகையிலை மதுபானச் சட்டம்)




* தமிழில் வெளிவந்த முதல் 'சினிமாஸ் கோப்' திரைப்படம் 'ராஜ ராஜா சோழன்' ஆகும். தமிழில் தொடர் நாவலொன்று திரைப்படமாக்கப்பட்டது அந்த நாவலின் பெயர் என்ன?
  பாவை விளக்கு



* கறுப்புக் கொடியானது எதிர்ப்பு, சோகம் போன்றவற்றை உணர்த்துகின்றது. அவ்வாறே, வெள்ளைக் கொடி எதனை உணர்த்துகின்றது?
  சமாதானம்



* தாதுசேன மன்னன் கலாவாவியைக் கட்டினான். அபய வாவியைக் கட்டிய மன்னன் யார்?
  பண்டுகாபயன்
* இலங்கையில் 'பொஸ்பேட்' படிவுகள் எப்பாவெல பிரதேசத்தில் காணப்படுகின்றது. இவ்வாறே, காரிய சுரங்கங்கள் காணப்படும் இடங்கள் எவை?
  போகல், கஹட்கஹ, ரகெதர



* விண்வெளிக்கு முதன்முதலில் சென்ற பெண்மணி வலண்டினா தெரஸ்கோவா ஆவார். அவ்வாறே, விண்வெளியில் அதிக நேரம் நடந்த முதல் பெண்மணி யார்?
  சுனிதா வில்லியம்



* உலகில் முதலாவது சிறுகதை ஆசிரியர் 'லொசிங்டன் இர்வின்' என்பவராவார். தமிழில் முதல் சிறுகதை ஆசிரியர் யார்?
  வா.வே.சு.ஐயர்



* நுளம்புகள், தொற்று நோய்க்கிருமிகள் பரவும் இடங்களைக் கண்டால் அறிவிக்க வேண்டிய முக்கிய அதிகாரி யார்?
  பொதுச் சுகாதார பரிசோதகர்
* கி.மு.776 இல் கிரேக்கத்தில் முதலாவது ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற்றது. இதற்கமைய, நவீன ஒலிம்பிக்கை ஆரம்பித்தவர் யார்? அது எப்போது ஆரம்பிக்கப்பட்டது?
  பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த 'பியரே கூபர்டின்' 1896 இல்
* தமிழ் திரைப்பட உலகம் 'கோலிவூட்' எனப்படுகின்றது. அவ்வாறே, மலையாள திரைப்பட உலகம் எவ்வாறு அழைக்கப்படுகின்றது?
  மாலிவூட்



* இடமிருந்து வலமாக எழுதப்படும் மொழிகள் எவை?
  அரபு,உருது, ஹிப்ரு



* ஐ.நா.சபையின் கொடியில் இளம் நீல வர்ணத்தில் 'ஒலிவ்' இலைகள் காணப்படுகின்றன. இது எதனைக் குறிக்கின்றது?
  சமாதானத்தை

தொகுப்பு: உடுவை பரந்தாமன்

# நாணயப் பெறுமதியை இறக்குவதாக சீனா மீது ஒபாமா அதிருப்தி...





சீனா தனது நாணயப் பெறுமதியை வேண்டுமென்றே குறைந்த மட்டத்தில் வைத்திருப்பதாகவும் வெளிநாடுகளுக்கிடையிலான வர்த்தகத்தில் அது பாரிய குளறுபடியை தோற்றுவிப்பதாகவும், இதனால், தனது நாணயப் பெறுமதியை சீனா உயர்த்த வேண்டும் என்று அமெரிக்க ஜனாதி பதி பராக் ஒபாமா சீனாவிடம் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஆசிய பசுபிக் பொருளாதார ஒத்துழைப்பு மாநாட்டில் உரையாற்றும்போதே, ஒபாமா இக்கருத்தினைத் தெரிவித்துள்ளார். பசுபிக் சுதந்திர வர்த்தக வலயமொன்றை உருவாக்கும் தனது திட்டத்தில் முன்னேற்றத்தைக் கண்டுள்ள ஒபாமா ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின்போதே சீனா மீதான தனது கண்டனத்தை வெளியிட்டுள்ளார்.

சீன ஜனாதிபதியுடன் நேரடியாக பேச்சுவார்த்தைகளை நடத்தியதன் பின்னரே, ஒபாமா மேற்படி கருத்துக்களை தெரிவித்துள்ளார். இருப்பினும், இது தொடர்பாக சீனாவிடமிருந்து எந்தவொரு கருத்தும் வெளியிடப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.




அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...

# இத்தாலியின் பிரதமராக மொன்ரி நியமனம்



இத்தாலியின் புதிய பிரதமராக மரியொ மொன்ரி நியமிக்கப்பட்டுள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. இத்தாலியில் ஏற்பட்டுள்ள கடன் நெருக்கடிக்கு தீர்வொன்றைக் காணும்பொருட்டு ஏற்கனவே பதவியில் இருந்த பிரதமர் சில்வியோ தனது பதவியிலிருந்து விலகியுள்ளதையடுத்தே, அப்பதவிக்கு மரியொ மொன்ரி நியமிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

மொன்ரி முன்னாள் ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆணையாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இத்தாலியின் ஜனாதிபதியான ஜியோர்கியோ மூத்த அரசியல்வாதிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தைகளின் பயனாகவே, மரியொ மொன்ரியை பிரதமராக நியமிப்பதற்கு இணக்கம் காணப்பட்டது. பதவியேற்ற பின்னர் உரை நிகழ்த்திய மரியொ மொன்ரி தற்போதைய நிதி நெருக்கடிக்கு உரிய தீர்வுகளைக் கண்டு சீரிய இலக்கை நோக்கிப் பயணிப்பதை இலட்சிய நோக்காகக் கொண்டுள்ளோம் என்று தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவிற்கு யுரேனியத்தை வழங்க ஆஸி. பிரதமர் விருப்பம்



அவுஸ்திரேலியாவிலிருந்து இந்தியாவிற்கு யுரேனியத்தை வழங்குவதற்கு அவுஸ்திரேலிய பிரதமர் ஜுலியா கிலார்ட் விருப்பம் தெரிவித்திருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. சீனா, ஜப்பான், தாய்வான் ஆகிய நாடுகளுக்கு அவுஸ்திரேலியா யுரேனியத்தை ஏற்றுமதி செய்து வருகின்ற போதிலும் இந்தியாவிற்கு அதன் ஏற்றுமதியை அவுஸ்திரேலியா தடைசெய்துள்ளது. அணு ஆயுத தயாரிப்பைத் தடுக்கும் ஒப்பந்தத்தில் இந்தியா கையெழுத்திடாததன் காரணமாகவே, அந்நாட்டிற்கு யுரேனியத்தை அனுப்புவதற்கு அவுஸ்திரேலியா தடை விதித்திருந்தது.

இருப்பினும் தற்போதைய பிரதமர் கிலார்ட் இந்தியாவிற்கு யுரேனியத்தை வழங்குவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளமை குறித்து கருத்துத் தெரிவிக்கையில் இந்தியாவிற்கு யுரேனியத்தை ஏற்றுமதி செய்வதால் உள்நாட்டில் ஏராளமானவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும்' என்று குறிப்பிட்டுள்ளார். வளர்ந்துவரும் வல்லரசு நாடாகிய இந்தியாவுடன் நட்புறவைப் பேணுவதே அவுஸ்திரேலிய பிரதமரின் குறிக்கோளாக இருப்பதாக விமர்சகர்கள் குறிப்பிடுகின்றனர்.

## அற்லஸ் கேள்வி - 335

**கேள்வி:** மரியொ மொன்ரி எந்த நாட்டின் பிரதமர்?

சரியான விடை...............................

உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 335,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.

## போட்டி இல - 333 இன் சரியான விடை: 2011 ஒக்டோபர் 31

**பரிசு பெறுவோர்**

அல்.இமான்,
பதுரியா வீதி, வாழைச்சேனை-05.

எம். அனஸ் அஹமட்,
மஹியங்கனை வீதி,
பதுளை.

டீ.தனுஷன்,
பள்ளேகலை, குண்டசாலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பொதுநலவாய வாய்ப்பை இழந்தாலும் தெற்காசிய போட்டிகள் இலங்கையில்

2018 ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள பொதுநலவாய விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கான அனுமதி அவுஸ்திரேலியாவிற்கு கிடைத்துள்ளமை நாம் அறிந்ததே. மேற்படி போட்டிகளை இலங்கையில் நடத்துவதா? அவுஸ்திரேலியாவில் நடத்துவதா? என்பதை தீர்மானிக்கும் வாக்கெடுப்பு நொவெம்பர் 11 ஆம் திகதி கெரிபியன் தீவுகளில் நடைபெற்றபோது, வாக்களிப்பில் கலந்துகொண்ட 71 நாடுகளில் 27 நாடுகள் மாத்திரமே இலங்கைக்கு ஆதரவாக வாக்களித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த வாக்கெடுப்பில் வெற்றியீட்டுவதற்காக, இலங்கையிலிருந்து ஏராளமானவர்கள் குழுவாக கெரிபியன் தீவுகளுக்கு சென்றதுடன், இதற்கென 100 மில்லியன் ரூபாய்க்கும் அதிகமான நிதி செலவிடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இத்தனை முயற்சிகள் மேற்கொண்டும் வெற்றி இலக்கை அடைய முடியாமல் போனமையினால் மேற்படி செலவுகள் குறித்து விமர்சனங்கள் தற்போது எழுந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, 2016 ஆம் ஆண்டில் தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் இலங்கையில் நடைபெறவிருப்பதாகவும் அவ்வாறே, அடுத்த வருடம் ஆசிய கனிஷ்ட பிரிவு மெய்வல்லுனர் போட்டிகளையும் இலங்கையில் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாகவும் விளையாட்டுத்துறை அமைச்சர் மஹிந்தானந்த அலுத்கமகே தெரிவித்துள்ளார்.

# சிட்னி மைதானத்தில் நூறாவது டெஸ்ட்




அவுஸ்திரேலியா-இந்தியா அணிகளுக்கிடையே டெஸ்ட் போட்டித் தொடர் எதிர்வரும் டிசம்பர் மாதம் அவுஸ்திரேலியாவில் ஆரம்பமாகவுள்ளது. இதில் குறிப்பிடத்தக்க விடயமாக அமைவது, சிட்னி நகரில் நடைபெறும் இரண்டாவது டெஸ்ட் போட்டியாகும். அதாவது, ஜனவரி 3 ஆம் திகதி சிட்னி மைதானத்தில் ஆரம்பமாகும் போட்டியானது, அந்த மைதானத்தில் நடைபெறும் 100 ஆவது போட்டியாக அமைகின்றமையே இதன் சிறப்பம்சமாகும்.

இவ்வாறு, நூறாவது டெஸ்ட் போட்டி நடைபெறும் மைதானம் என்ற பெருமையைப் பெறுகின்றமையால் போட்டி நடைபெறும் அனைத்து தினங்களிலும் கோலாகலமான கொண்டாட்டங்கள் நடைபெறவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. 1882 ஆம் ஆண்டு தொடக்கம் இந்த மைதானத்தில் டெஸ்ட் போட்டிகள் நடைபெற்று வருகின்றன. இவற்றில் அவுஸ்திரேலிய அணி 54 போட்டிகளில் வெற்றியும், 24 போட்டிகளில் தோல்வியும் பெற்றுள்ளதுடன், 17 போட்டிகள் வெற்றி தோல்வியின்றியும் முடிவடைந்துள்ளது.

# 100 டெஸ்ட்டை எட்ட வேண்டும்




டெஸ்ட்டில் நூறு போட்டிகளுக்கு மேல் விளையாட வேண்டும் என்பதே தனது ஆசை என்று இந்திய அணியின் துடுப்பாட்ட வீரர் ஷெவாக் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் மேற்கிந்திய தீவுகளுடனான போட்டிகள் நடைபெற்று வருகின்றமை நாம் அறிந்ததே. இத்தொடரின் இரண்டாவது போட்டியே ஷெவாக்கின் 91 ஆவது போட்டியாகும். மேலும் கருத்துத் தெரிவித்துள்ள அவர், "கிரிக்கெட்டில் பத்து வருடங்களாக விளையாடி வருகின்றமை மகிழ்ச்சி அளிப்பதாக உள்ளது. கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறுவதற்கான உத்தேசம் இப்போது இல்லை.எனினும், நூறு டெஸ்ட் போட்டிகளுக்கு மேல் விளையாட விரும்புகின்றேன். இந்தியாவின் முன்னாள் வீரர்களான கவாஸ்கர், வெங்சாக்கர், டெண்டுல்கர், டிராவிட், கங்குலி, கும்ப்ளே ஆகியோரும் நூறு டெஸ்ட் போட்டிகளில் கலந்துகொண்டுள்ளனர். இந்த பட்டியலில் நானும் ஒருவனாக இருக்க விரும்புகின்றேன்" என்று குறிப்பிட்டுள்ளார்.

2001 ஆம் ஆண்டில் தென்னாபிரிக்காவிற்கு எதிரான போட்டியில் அறிமுகமாகிய ஷெவாக் தற்போதுவரை 91 டெஸ்ட் போட்டிகளில் கலந்துகொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கிரிக்கெட் சூதாட்ட விவகாரம் தொடர்கிறது

கிரிக்கெட் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக நீதிமன்ற தீர்ப்பிற்கு ஆளாகிய பாகிஸ்தான் வீரர்கள் உட்பட, சூதாட்டத் தரகராக செயற்பட்ட மசார் மஜிட் ஆகியோர் சிறைத்தண்டனை அனுபவித்து வருகின்றமை நாம் அறிந்ததே. இருப்பினும் இந்த சூதாட்ட விவகாரம் மேலும் நீடித்து வருவதை அறிய முடிகின்றது. அந்தவகையில், பாகிஸ்தான் அணியின் மேலும் இரண்டு வீரர்களான கம்ரன் அக்மல், வஹாப் ரியாஸ் ஆகியோரும் கூட 'ஸ்பொட் ஃபிக்ஸிங்' எனப்படும் சூதாட்டத்தில் ஈடுபட்டதாக புதிய





குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. சூதாட்ட தரகர்-மசார் மஜித் இந்த இரண்டு பேரினது பெயரையும் வழக்கு விசாரணைகளின்போது தெரிவித்தமையின் காரணமாகவே, இந்தப் புதிய சர்ச்சை ஏற்பட்டுள்ளது. இதனால், பாகிஸ்தான் அணியில் இவர்கள் இடம்பெறுவது கேள்விக்குறியாகியுள்ளது. இது குறித்து கருத்துத் தெரிவித்துள்ள கம்ரன், ரியாஸ் ஆகியோர் தாம் குற்றமற்றவர்கள் என்றும், கிரிக்கெட் சூதாட்டம் தொடர்பாக ஐ சி சி மேற்கொள்கின்ற எந்தவொரு விசாரணைக்கும் முகம்கொடுக்க தாம் தயாராகவே இருப்பதாகவும் தம்மீது எந்தவொரு குற்றமும் இல்லாததாலேயே உலகக் கிண்ணப் போட்டிகளிலும் தம்மால் கலந்துகொள்ள முடிந்ததாகவும் குறிப்பிட்டுள்ளனர்.

## கிரிக்கெட் சபைக்கான தேர்தல் டிசம்பரில்



**இலங்கையில் இடைக்கால கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை கலைக்கப்பட்டுள்ளதை அடுத்து மேற்படி சபைக்கான உறுப்பினர்களை தெரிவுசெய்வதற்கான வாக்கெடுப்பு டிசம்பர் மாதத்தில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.**

**குறித்த வாக்கெடுப்பு நடைபெறும் காலம் வரையிலான இடைக்காலத்தில் இலங்கையில் கிரிக்கெட் துறை செயற்பாடுகளை, நிர்வாகங்களைக் கவனிப்பதற்கான அதிகாரியாக விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் உதய செனவிரத்ன நியமிக்கப்பட்டுள்ளார். கலைக்கப்பட்ட இடைக்கால கிரிக்கெட் சபையின் தலைவராக உபாலி தர்மதாசவுடன் நியுமல் பெரோரா மற்றும் சித்தவெத்த முனி ஆகியோர் கடமையாற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. மேற்படி இடைக்கால சபை கடந்த ஜூலை மாதம் தெரிவுசெய்யப்பட்டிருந்த போது, மேலும் 6 மாத காலத்துள் தேர்தல் மூலமான கிரிக்கெட் சபை அமைக்கப்படும் என்ற தனது உறுதி மொழிக்கு அமையவே, குறித்த இடைக்கால கிரிக்கெட் சபை கலைக்கப்பட்டுள்ளதாக விளையாட்டுத் துறை அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MARS 500 திட்டத்திற்காக பூமியில் நடந்த ஒத்திகை வெற்றிகரமாக நிறைவு


ஒத்திகைத் திட்டத்தின்போது 'செவ்வாய் 500' குழுவினர் மூடிய இரும்புக் கூடத்தினுள் தங்கியிருக்கும்போது...

*செவ்வாய்க் கிரகத்தில் ஆய்வுகளை மேற்கொள்வதற்காக, விண்வெளி வீரர்களை அனுப்பும் திட்டத்திற்கு முன்னோடியாக பூமியில் நடத்தப்பட்ட 'செவ்வாய் 500' (Mars 500) திட்டத்திற்கான ஒத்திகை, இம்மாதம் 4ஆம் திகதி வெற்றிகரமாக நிறைவடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது*

மொஸ்கோவில் இடம்பெற்ற இந்த ஒத்திகைத் திட்டத்திற்கமைய, சுமார் ஒன்றரை வருடமாக விண்கலம் போன்ற மூடிய இரும்புக்கூடத்தினுள் தங்கியிருந்த ஆறு விண்வெளி வீரர்கள் தமது ஆய்வுத் திட்டத்தை முடித்துக்கொண்டு வெளியேறினர். ரஷ்யாவைச் சேர்ந்த 3 வீரர்களும் பிரான்ஸ் வீரரொருவரும் இத்தாலிய வீரரொருவரும் சீன வீரரொருவரும் இந்த ஒத்திகையில் கலந்துகொண்டிருந்தனர். 520 நாட்களுக்குப் பின்னர் வெளியே வந்த இந்த வீரர்களை அவர்களது உறவினர்களும் ரஷ்ய மருத்துவக் கழகத்தினரும் அறிவியலாளர்களும் சந்தித்தனர். அதன் பின்னர் அவர்கள் மருத்துவ பரிசோதனைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

நீண்டகால விண்வெளிப்பயணங்களை மேற்கொள்ளும்போது, விண்வெளி வீரர்களின் மனநிலை மற்றும் உடல் நிலை என்பன எவ்வாறு அதற்கு ஒத்துழைக்கின்றன? என்பதை அறிந்து கொள்வதற்காகவே, இந்த ஒத்திகை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இந்த ஒத்திகை நடவடிக்கையின் போது, செவ்வாய்க் கிரகத்தில் தரை இறங்குதல், நடத்தல் போன்ற பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன. மேலும் செவ்வாய்க் கிரகத்தில் தங்கியிருந்து ஆய்வுகள் நடத்துவது போன்ற ஒத்திகை மற்றும் பயிற்சிகளையும் இந்த 'செவ்வாய் 500' திட்டத்தின்போது விண்வெளி வீரர்கள் பெற்றுக்கொண்டனர். அத்துடன், அவர்கள் தங்க வைக்கப்பட்டிருந்த இரும்புக்கூடமும் விண்கலத்தில் இருப்பது போன்ற உணர்வைத் தரும் வகையில் அமைக்கப்பட்டிருந்தது. விண்கலத்தில் பயணம் செய்யும்போது இருக்கும் எடையற்ற தன்மையுடன்கூடியதாக இந்த கூடம் வடிவமைக்கப்பட்டிருந்தது.




'செவ்வாய் 500' ஒத்திகைக்கூடம் MARS 500


கடந்த 4 ஆம் திகதி ஒத்திகை கூடத்திலிருந்து வெளிவரும் போது...

இத்திட்டம் பற்றி அக்குழுவுக்கு தலை தாங்கிய அலெக்ஸி சீ தேவ் தெரிவிக்கையில்: "இந்த ஒத்திகைத் திட்டம் வெற்றிகரமாக முடிவடைந்துள்ளது. அனைவரும் நல்ல தேகாரோக்கியத்துடன் உள்ளோம். இனி, எமது அடுத்த நிஜத் திட்டத்தை நோக்கிச் செல்ல இருக்கின்றோம்" என்றார்.

அனேகமாக, பூமியில் இருந்து விண்கலமொன்றில் செவ்வாய்க் கிரகத்தை சென்றடைவதற்கு சுமார் 250 நாட்கள் தேவைப்படுகின்றது. அத்துடன், அங்கு 30 நாட்கள்வரை தங்கியிருந்து ஆய்வுகளை நடத்தவேண்டியும் இருக்கும். இந்த ஆய்வுகளின் பின் அங்கிருந்து புறப்பட்டு மீண்டும் 240 நாட்கள் பயணித்தே பூமியை வந்தடைய வேண்டும். இதன்படி செவ்வாய்ப் பயணத்தின் போது, 520 நாட்களை விண்வெளியில் கழிக்க வேண்டியேற்படும். எனவே, இதனைத் தாங்கும் அளவுக்கு அப்பயணத்தில் கலந்துகொள்ளும் விண்வெளி வீரர்களின் உடல் மற்றும் உள நிலை சிறப்பாக இருக்க வேண்டும். இதனை அறிந்துகொள்வதற்காகவே பூமியில் மூடிய விண்கலம் போன்ற இரும்புக் கூடத்தினுள் 'செவ்வாய் 500' திட்டத்திற்கான ஒத்திகை மேற்கொள்ளப்பட்டது.



# பூமியைக் கடந்து சென்ற '2005YU55' சிறுகோள்




இம்மாதம் (நொவெம்பர்) 8 ஆம் திகதி '2005YU55' எனும் சிறுகோள் பூமியில் இருந்து சுமார் 325,000 கிலோ மீற்றர் இடைவெளியில் பூமியைக் கடந்து சென்றதாக நாஸா அறிவித்துள்ளது. இத்தூரம் பூமிக்கும் சந்திரனுக்கும் இடையிலான தூரத்தைவிடக் குறைவான தாகும்.

கடந்த 200 ஆண்டுகளில் பூமியிலிருந்து குறுகிய இடைவெளியில் கடந்து சென்றுள்ள விசாலமான சிறுகோள் இதுவாகும் என நாஸா அறிவித்துள்ளது. இந்த சிறுகோள் கருமை நிறத்திலும் ஓரளவு உருளை வடிவத்திலும் தோற்றமளித்துள்ளதோடு, 20 மணித்தியாலங்களுக்கு ஒருமுறை சுழன்றபடி சென்றுள்ளது.

இந்த சிறுகோள் பூமியில் மோதும் பட்சத்தில் 65,000 இற்கும் மேற்பட்ட அணுகுண்டுகள் ஒன்றிணைந்து வெடிப்பதன் பாதிப்புகள் பூமியில் ஏற்படலாம் என்றும் இதனால், பூமியில் 6 மைல் அகலமும் 2,000 அடி ஆழமும்கொண்ட பாரிய கிடங்கொன்று தோன்றலாம் எனவும் முன்னர் தெரிவிக்கப்பட்டது. எனினும், தற்போது இந்தச் சிறுகோள் பூமியை விட்டு விலகிச் சென்றுள்ளதால், குறைந்தது அடுத்த சில நூற்றாண்டுகளுக்கு இது பூமியைத் தாக்குவதற்கு வாய்ப்பில்லை என நாஸா விஞ்ஞானிகளான லான்ஸ் பென்னர் மற்றும் யோமன்ஸ் ஆகியோர் தெரிவித்துள்ளனர். அத்துடன், இது பூமிக்கு மிக அண்மையில் வரும்போது, பூமியின் மீதான அதன் ஈர்ப்புவிசை மிகவும் புறக்கணிக்கத்தக்க அளவாகவே இருக்கும் எனவும் இவ்வாறான சிறுகோள்கள் சுமார் 25 ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் பூமிக்கு மிக அண்மையில் வரும் எனவும் நாஸா விஞ்ஞானிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.






பூமிக்கு குறுகிய இடைவெளியில் இந்த சிறுகோள் சென்றதனால், அதனை மிகத் தெளிவாக அவதானிக்க முடிந்ததாகவும் நாஸா விஞ்ஞானியான லான்ஸ் பென்னர் தெரிவித்துள்ளார்.



கெலிஃபோர்னியா மற்றும் போர்டோ ரிகோ ஆகிய இடங்களில் உள்ள வானொலி தொலை நோக்கிகள் இந்த சிறுகோளில் இருந்து வெளி வந்த வானொலி எதிரொலிகளைப் பதிந்துள்ளன. இதனை அடிப்படையாக வைத்து இந்த சிறுகோள் எதனால் உருவாகியுள்ளது?, அதன் வடிவம் எத்தகையது? போன்றவற்றை வானியலாளர்களால் மிகத் துல்லியமாக அறிய முடிந்துள்ளது. மேலும், 2029 ஜனவரி 19 ஆம் திகதியளவில் இச்சிறுகோள் வெள்ளிக்கோளுக்கு 180,000 கிலோ மீற்றர் இடைவெளியில் கடந்து செல்லும் என எதிர்பார்க்கப்படுகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலை விடுமுறையை பயனுடையதாக்குவோம்!

டிசம்பர் மாத விடுமுறை அண்மித்துக்கொண்டிருக்கின்றது. சிறார்கள் தமது விடுமுறையை எவ்வாறு கழிப்பது? என்பது தொடர்பாக, அங்கலாய்த்தவண்ணமுள்ள அதேநேரம், குதூகலமாக வரவேற்கவும் தயார்நிலையில் உள்ளனர். காரணம், அவர்கள் தங்களது திட்டத்தை செயற்படுத்தக் கனாக் காண்கின்றனர். ஆயினும், பெற்றோர்களோ, தமது பிள்ளைகளுக்கு விடுமுறை என்றதுமே மனம் வருந்துகின்றனர். ஏனெனில், வீணாகப் பொழுதைப் போக்குவார்களே என்ற எண்ணம்தான். இந்நிலையிலிருந்து சிந்திப்போருக்கு பொழுதைப் பயனுடையதாகக் கழிக்க இதோ சில ஆலோசனைகள்.

பத்திரிகைகளில் ஏற்கனவே பிரசுரமான அல்லது தற்போது வெளிவந்துகொண்டிருக்கும் சிறுவர் பகுதியை தேர்ந்தெடுங்கள்.





ஆக்கங்களை தனித்தனியாக வெட்டுங்கள். பின் அவற்றை பாடல், கதை, பொது அறிவு, பழமொழி, விகடத்துணுக்கு..... என வேறுபடுத்தி பழைய புத்தகம் ஒன்றில் ஒட்டுங்கள். தற்போது ஒரு சிறுவர் நூல் தயார் அல்லவா? விடுமுறை நாட்களில் அவற்றை வாசியுங்கள். இதனால், புத்தாக்க சிந்தனைத்திறன் விருத்தியாகும். ஓய்வும் பயனுள்ளதாக அமையும். வாசிப்பு, கிரகித்தல், எழுத்துப் பிழையின்மை, மேலதிக அறிவு என்பன இதன்மூலம் விருத்தியடையும்.

கைவேலைப்பாடுள்ள



ஆக்கங்களையும் தயாரிக்கலாம். தையல், பின்னல், கழிவுப் பொருட்களிலான ஆக்கங்களைத் தயாரித்து வீட்டை அழகுபடுத்தலாம்.

பயன்மிகு கதைகள், சிறுகதைகள், படிப்பினையூட்டும் நூல்கள் போன்றவற்றை வாசித்து குறிப்பெடுத்துக் கொண்டால் அவ்வப்போது தேவைப்படும் வேளைகளில் உபயோகித்துக் கொள்ளலாம். வீட்டு முற்றத்தில் தோட்டம் அமைத்து மனங்கவர் பூஞ்செடிகளை நாட்டிப் பராமரிக்கலாம். பூச்சாடிகளிலும் அலங்காரத் தாவரங்களை நாட்டலாம்.

பொலித்தீன் பைகள், டயர், டின் வகைகள் போன்றவற்றில் வளமான மண்ணை இட்டு காய்கறி வகைகளை நாட்டலாம். இதனால், ஓய்வும் பயனுள்ளதாக அமையும். உணவுத் தேவையும் பூர்த்தியடையும். மேலதிக வருமானத்தையும் ஈட்டலாம்.

இவற்றைத் தவிர, வானொலி, பத்திரிகை, தொலைக்காட்சி, முதலானவற்றில் ஒலி/ஒளிபரப்பாகும் வெளிவரும் சிறுவர் நிகழ்ச்சிகளை செவிமடுத்து அவற்றில் கேட்கும் வினாக்களுக்கு விடை அளித்துப் பரிசில்களை வெல்லுங்கள். உங்களுக்கு விருப்பமான ஆக்கங்களையும் எழுதி அனுப்புங்கள். உங்களை நீங்களே ஓர் எழுத்தாளராக அறிமுகம் செய்து கொள்ளுங்கள்.



இவ்வாறு விடுமுறையைக் கழிப்பதற்கு இப்போதே திட்டமிட்டுக்கொள்ளுங்கள். இதனால், உங்களது திறனை நீங்கள் வளர்த்துக் கொள்வதோடு, விடுமுறையும் ஓய்வும் பயனுள்ளதாகவும் அமைய வழி செய்யலாம். உங்கள் விடுமுறை சிறப்பாக அமைய வாழ்த்துக்கள்.

-பாராஃ,
உயன்வத்த.

## விஜய் மாணவர் கழகம்



அங்.இல: 4376
ஆர்.எஃப்.ரிஸ்மா,
ரொபர்ட் வத்த,
கொட்டாரமுல்ல.



அங்.இல: 4377
எம்.எம்.முனீர்,
வெரல்லகம,
கண்டி.



அங்.இல: 4378
எஸ்.ஹரேன் பிரசாத்,
போவே,
இதல்கஸ்ஹின்ன.



அங்.இல: 4379
வி.புருஷோத்மன்,
சண்டிலிப்பாய்,
யாழ்ப்பாணம்.



அங்.இல: 4380
ஐ.எஃப்.கஹ்லா,
எழுவிலை,
பாணந்துறை.



அங்.இல: 4381
இ. அப்துல்லாஹ்,
களுபோவில,
தெஹிவளை.



அங்.இல: 4382
யோ.யோதிகா,
மடுக்கரை,
நானாட்டான்.



அங்.இல: 4383
எஸ்.எம்.சிராஜ்,
காயர் வீதி,
ஏறாவூர்.



அங்.இல: 4384
வ.நிர்திகன்,
மாசார்,
பளை.



அங்.இல: 4385
ஆர்.றேபனா,
பள்ளிமுனை,
மன்னார்.

## கல்வி பற்றிய அறிஞர்களது கூற்றுக்கள்

✦ கல்வி கற்பதைக் கடமையாகக் கொள்பவர் இறப்பதில்லை. கற்றறிந்தோரின் சொற்களைக் கேட்டலும் அறிவியல் அறிவை மற்றவர்களுக்குப் புகட்டுதலும் சமயச் சடங்குகளை விட உயர்ந்தவை. **நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்**

✦ உண்மையான பொருளைச் சொல்லப் போனால் ஒரு மனிதன் கல்வி கற்கும் வரையில் அவனை மனிதன் என்று செல்லமுடியாது.
**எச்.மான்**

✦ என்ன நினைக்கவேண்டும் என்பதைவிட, எப்படி நினைக்க வேண்டும் என்பது பற்றியும், மற்றவர்களுடைய அறிவு போதனைகளை அதிகமாக நினைத்து ஞாபகத்தில் வைத்திருப்பதைவிட, நாமே நம்முடைய அறிவு விருத்திக்கு என்ன செய்ய வேண்டும் என்பது பற்றியும் சொல்லித் தருவது மட்டுமே நாம் கற்கும் கல்வியின் குறிக்கோளாக இருக்க வேண்டும்.
**பியாட்டி**

✦ தெரியாத ஒன்றைத் தெரிந்துகொள்வதற்காக கற்றுத் தருவது கல்வியல்ல. வாழ்க்கையில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்று தெரியாதவர்களுக்கு நடந்துகொள்ள வேண்டிய முறைகளைச் சொல்லித் தருவதே கல்வி.
**ரஸ்கின்**

✦ ஒரு மனிதன் தன்னுடைய பொருட் செல்வத்தை எல்லாம் தன்னுடைய அறிவு அபிவிருத்திக்காகச் செலவழிப்பானேயானால் அத்தகைய அறிவை அவனிடமிருந்து யாரும் அபகரித்துக்கொள்ள முடியாது. கல்வியறிவிற்காக முதலீடு செய்பவன் எப்பொழுதுமே நல்ல பலனை அடைகின்றான்.
**ஃபிராங்ளின்**

✦ இன்றைய உலகத்தில் பல வியாதிகளைக் குணப்படுத்துவதற்கு கல்வி ஒன்றே சிறந்தது. ஆனால், என்ன வியாதி என்று கண்டுபிடிக்கா விட்டால் குணப்படுத்துவது பிரயோசனமற்றதாகப் போய்விடும்.
**ஜோன்புக்கர்**

✦ தன்னுடைய தாய்மொழியைப் புரிந்துகொள்ளவும், பேசவும், படிக்கவும், கற்கவும் வருகின்ற மாணவனே நமக்கு முதலில் தேவை.
**எச்.ஜி.வெல்ஸ்**

**எஸ்.எல்.மன்சூர்**

படத்தை
இங்கே
ஒட்டவும்



## விஜய் மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்:..................................
முகவரி:..................................
..................................
பாடசாலை:..................................
வகுப்பு:..................................
திகதி: ..................................

ஏற்கனவே அனுப்பியவர்கள் மீண்டும் அனுப்புவதை தவிர்க்கவும்.

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2037
கொழும்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2,250 ஆண்டுகளுக்கு முன்பே புற்றுநோய்!



எகிப்தில் 2,250 வருடங்களுக்கு முன்பே ஒருவர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு மரணமடைந்துள்ளமை தற்போதைய ஆய்வுகளின்மூலம் தெரியவந்துள்ளது. எகிப்தில் பதப்படுத்தப்பட்டு புதைக்கப்பட்ட 'மம்மி' ஒன்றிலேயே இந்த புற்றுநோய் கண்டறியப்பட்டுள்ளது. லிஸ்பன் நகரில் உள்ள அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டுள்ள இந்த மம்மிக்கு M1 என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்த பதப்படுத்தப்பட்ட மம்மியை







CT(Computerized Tomography) ஸ்கேன் செய்து பார்த்ததில் இந்த நபர் 2,250 ஆண்டுகளுக்கு முன்னர் புற்று நோயால் பாதிக் கப்பட்டவர் என்பது தெரிய வந்துள்ளது.

மேலும், கி.மு.305 ஆம் காலப்பகுதிகளில் தொலமி மன்னர்கள் 275 ஆண்டுகள் எகிப்தை ஆண்டு வந்ததாகக் கருதப்படு கிறது. அக்கால கட்டத்தில் வசித்த ஒருவரது மம்மியே இதுவாகும். இவரது இடுப்பு, முள்ளந் தண்டுப் பகுதிகளில் புற்றுநோய் கட்டிகள் இருந்திருக்கின்றன. சுரப்பி களில் ஏற்பட்ட புற்றுநோய் பின்னர் கை, கால்களின் மேற்பகுதி என அனைத்து எலும்புகளிலும் பரவியிருக்கின்றது. மிக கொடூர மாகப் பாதிக்கப்பட்டிருந்த அந்த நபர் நோயின் தீவிரம் தாங்க முடியாமலேயே மரணமடைந் துள்ளார். இறக்கும்போது இவருக்கு வயது 51 முதல் 60 வரை இருந்திருக்கலாம் என்கின்றது இந்த ஆய்வு. 1,700 ஆண்டுகளுக்கு முன்னர் புற்றுநோயால் பாதிக்கப்பட்டு இறந்த கிரேக்க சிதியன் மன்னரின் எலும்புக்கூடு ரஷ்யாவின் தென் சைபீரிய பகுதியில் முன்னர் கண்டுபிடிக்கப்பட்டது. எனினும், எகிப்து நபர் 2,250 ஆண்டுகளுக்கு முன்பே புற்றுநோயால் பாதிக்கப்பட்டு இறந்தமை தற்போது கண்டறியப்பட்டுள்ளமை இதுவே முதல் தடவையாகும்.

# பூமியின் உட்புற காந்தசக்தி மைய வலிமை



நாம் வாழும் பூமியில் உள்ள புவியீர்ப்பு விசைக்கு முழுமையான காரணம் புவியின் உட்புறப்பகுதியில் உள்ள காந்தசக்தி மையமே ஆகும். இந்த காந்தசக்தி மைய வலிமை தொடர்பாக, கெலிஃபோர்னிய பல்கலைக்கழக பூமி மற்றும் கோள் அறிவியல்துறை பேரா சிரியர் புருஸ் ஏ.பெபெட்



என்பவர் ஆராய்ச்சி ஒன்றினை மேற்கொண்டார். அதன்படி, பூமியின் உட்புறம் சுமார் 1,800 மைல்கள் (2,896 கி.மீற்றர்) ஆழத்தில் இந்த காந்தசக்தி மையம் இருப்பதை அவர் கண்டறிந்துள்ளார். இது பூமியின் மேற்பரப்பில் காணப்ப டும் காந்தசக்தி மையத்தைவிட, 50 மடங்கு வலிமை வாய்ந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும், பூமியின் உட்புறத்தில் உள்ள காந்தப்புலம் தொடர்ந்து பல்லாயிரக்கணக்கான வருடங்களாக நீடித்து வருகின்றமைக்கு பூமியில் காணப்படும் வெப்பமே அடிப் படையாகும். இந்த வெப்பமானது, தொடர்ந்து காந்தப்புலத்தை தோற்றுவிக்கும் ஒரு சிறந்த சக்தி யாகும். ஏறத்தாழ 1,400 மைல்கள் (2,253 கி.மீ) அளவிற்கு அடர்த்தி மிகுந்த புவியின் வெளிப்புற அடுக்கா னது, வெப்பத்தின் உதவியால் கொதிப்படைகின்றது. இதனால், புவியினுள்ளே உள்ள தனிமங்கள் ஆற்றலை உற்பத்தி செய்து பின்னர்



சிறிது சிறிதாக மின்னாற்றலாக மாறு கின்றது. அந்த மின்னாற்றல் காந்தசக்தி மையம் பூமியில் தொடர்ந்து நீடிக்க உதவுகின்றது. பின்னர் பூமியின் மேற்புறம் வரை பரவுகின்றது. இதுபற்றிய ஆராய்ச் சிகளில் தொடர்ந்தும் ஈடுபட்டுள்ளார் அறிவியலாளர் புருஸ்.

# புவி வெப்பமடைதலினால் அதிகரிக்கும் பகல் வெப்பம்

ஐக்கிய நாடுகள் சபையானது, தற்போது அதிகரித்து வரும் வெப்பம் குறித்தும் அதன் மோசமான விளைவுகள் குறித்தும் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள் ளது. அதன்படி, தற்போது பகல் வெப்பம் அதிகரித்து வருவதனால் வயதானவர்கள், நோயுற்றவர்கள் மற்றும் நலிந்தவர்கள் அனைவரும் பெரிதும் பாதிப்புக்குள்ளாகும் நிலை ஏற்படுவதோடு, அனல் மின் நிலையங்களில் மின்சார உற்பத்தி குறையும் ஆபத்தும் ஏற்படலாம் என்று கூறுகின்றது.

மேலும், தொடர்ந்து வரும் 90 ஆண்டுகளில் 5 டிகிரி வரை வெப்பம் அதிகரிக்கலாம் எனவும் இதனால், மத்திய ஐரோப்பா, வட அமெரிக்கா மற்றும் தென் அமெரிக்காவில் வறட்சி நிலை ஏற்படலாம் எனவும் அந்த








அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது. அத்துடன், அதிகரித்துவரும் புவி வெப்பத் தால் கடல்நீர் வெப்பமடைந்து கடற்கொந்தளிப்பு, வறட்சி, புயல், போன்ற பாரிய அழிவுகளைச் சந்திக்க நேரிடலாம் என்றும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


# ஆய்வுகூடத்தில் இறைச்சி தயாரிக்கலாம்



நெதர்லாந்தின் மெஸ்ட்ரிக்ட் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மார்க் போஸ்ட் என்ற விஞ்ஞானி உயிரினங்களைக் கொல்லாம லேயே ஆய்வுகூடத்தில் இறைச்சி யைத் தயாரிக்கும் புதிய முறை ஒன்றைக் கண்டறிந்துள்ளார். விலங்குகளின் உடலில் இருந்து எடுக்கப்படும் செல்களில் இருந்தே இந்த இறைச்சி தயாரிக் கப்படுகின்றது. இவ்வாறான இறைச்சி உற்பத்தியின்மூலம் விலங்கினங்கள் பாதுகாக்கப்படு வதுடன், சுற்றுச்சூழலும் பாதுகாக்கப்படும் என்கின்றார் இந்த விஞ்ஞானி.

இந்தப் புதிய முறைமூலம் குறைந்தளவு இறைச்சியை தயாரிக்க 3 லட்சத்து 45 ஆயிரம் டொலர்கள் செலவாகின்றது. செலவு அதிகமானாலும் இத்தகைய முறையின்மூலம் இறைச்சியைத் தயாரிக்கலாம் என்பதற்கு இதனை ஒரு சான்றாகவே கொள்ளமுடியும்.





இது உண்மையான இறைச்சிபோல் உள்ளமையால் எதிர்காலத்தில் இந்த இறைச்சி தயாரிப்பில் பாரிய முன்னேற்றம் ஏற்படலாம் என்றும் மார்க் போஸ்ட் தெரிவிக்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக மாற்றங்களைத் தரும் இணையசேவை

உலகில் இன்று நாளுக்கு நாள் பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்து வருகின்றன. குறிப்பாக, நவீன கண்டுபிடிப்புக் களும், முன்னேற்றங்களும் துரித வேகத்தில் நடக்கின்றன. இந்த மாற்றங்களை அறியவேண்டும் என்ற ஆவல் அனைவருக்கும் ஏற்படுவது இயல்பே. எனவே, இவ்வாறான தகவல்களை உடனுக்குடன் அறிந்துகொள்வதற்கு livescience.com என்ற இணையத்தளம் உதவிபுரிகின்றது. குறிப்பாக தொழிநுட்பம், சுகாதாரம், விண்வெளி, சுற்றாடல், விலங்கியல் போன்ற துறைகளில் நிகழ்கின்ற புதிய




கண்டுபிடிப்புக்கள் மாற்றங்கள், மற்றும் அவை பற்றிய விபரங்களை ஆக்கங்களாகவும், video, image போன்ற வடிவங்களிலும் விஞ்ஞான ரீதியாக இந்த இணையத்தளம் வழங்குகின்றது. மேலும், இவை தொடர்பான தகவல்களை தினந்தோறும் email மூலமாக நமக்கு இலவசமாக உடனுக்குடன் அறியத்தருவது இந்த இணையத்தளத்தின் மற்றுமொரு சிறப்பம்சமாகும். இந்த இணையத்தளத்தின் முகவரி: http://www.livescience.com

# ஈ பேப்பரின் பரிணாமம்



சாதாரணமாக ஒரு புத்தகத்தையோ பத்திரிகையையோ வாசிப்பதைப் போல்தான் வாசிக்க வேண்டும். அத்துடன், இதன் பின்புறமிருந்து பாய்ச்சப்படுகின்ற ஒளியின் துணை யோடே இதனை வாசிக்கமுடியும். தற்போதைய பாவனையிலுள்ள 'ஈபேப்பர்'களை வாசிப்பவர்களின் கண்களுக்குப்





'ஈ பேப்பர்' எனப்படும் மின்னியல் பத்திரிகையைப் பற்றி நீங்கள் அறிந்திருப்பீர்கள் . நவீன மாற்றங்களின்படி, இந்த ஈ பேப்ப ரில் இன்னுமொரு புதிய மாற்றம் ஏற்பட்டிருப்பதாக அறியவருகின் றது. அதாவது, 'கின்ட்ல்லே' எனப் படும் 'ஈ ரீட்ஸ்' வகையிலான கணினியிலுள்ள பக்கங்களை வாசிப்பதற்கு திரையின் அடிப்புற மாக புதிய வகை 'ஒளி பாய்ச் சுகை' இதில் பொருத்தப்பட்டிருக் கின்றது.

எனினும், இதனை

பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய பல காரணிகள் உள்ளன. ஆனால், புதிதாக அறிமுகமாகவுள்ள 'ஈரீட்ஸ்' வகையிலான 'டெப்லட்' இல் இந்த பாதிப்பில்லை என்று குறிப்பிடப்படுகின்றது.

அதாவது, 'ஃப்லெக்ஸ்' லயிட்டிங் எனப்படுகின்ற தொழில்நுட்பத்தின் உதவியுடனான ஒளி அமைப்பின் காரணமாக, இந்த பாதிப்பு நிவர்த்தி செய்யப்படுகின் றது. எப்படியென்றால், இதில் மிகவும் மெல்லிய ஒளிப் பாய்ச்சலே காணப்படுகின்றது. எனவே, கண்களுக்குப் பாதிப்பின்றி இதனை வாசிக்க முடிவதுடன், மின்சார விரயத்தையும் இது கட்டுப்படுத்துகின்றது.

தற்போது, ஆராய்ச்சி மட்டத்திலுள்ள மேற்படி 'சின்ட்லே ஈரீட்ஸ்' கணினி கூடிய விரைவில் பாவனைக்கு வரும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது.

# கெலக்ஸி டெப்லட் அறிமுகம்



'செம்ஸுங் கெலக்ஸி டெப் 7.0' எனப்படும் புதியவகை 'டெப்லட்' கணினியொன்று நொவெம்பர் 5 ஆம் திகதி இந்தோனேஷியாவில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பீ.டி.இந்தோனேஷியா என்ற நிறுவனமே இந்த 'டெப்லட்' கணினியை அறிமுகப்படுத்தி யுள்ளது. இதனை அறிமுகப்படுத்திய நாளிலேயே 1,200 கணினிகள் விற்றுத் தீர்ந்துவிட்டமை குறிப்பிடத்தக்கது.

அறிமுக விலையாக 568 அமெரிக்க டொலர் விலைக்கு இந்த 'டெப்லட்' கணினி விற்பனையாகியுள்ளது.




இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2011, நவம்பர் மாதம் 23 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday November 23, 2011.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org